# கவிதை மடல்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

ஆசிரியர்

கவி. அ. சிதம்பரநாத பாவலர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/திருமதி/செல்வி
திரு. K. சக்திதாசன்
அவர்கள் அன்பளிப்பாக அளித்தது
திகதி 05.11.2008

45715

பிரசுரம்:

கஸ்தூரிபா ஸ்டோர்ஸ்

43, மாளிகாகந்தை ரோடு

கொழும்பு

முதற்பதிப்பு
ஏப்ரல் 1949.

பதிப்பாசிரியர்கள்:
கே. ஆர். செல்வநாதன்
எஸ். சங்கரலிங்கம்

விலை ரூ. 1-25

கலைமகள் பிரஸ், கொழும்பு—3449-1-2

# பதிப்புரை

யாப்பிலக்கணம் கற்றவர் யாரும் செய்யுள் இயற்றிவிடலாம். பொருளுக்கு ஏற்ற உருவம் அமைத்துவிட்டதாக எண்ணி அவர்கள் திருப்தியுமடையலாம். ஆனால், அதில் சுத்தமானக் கவிதாபாவம் அமைந்திருக்கமுடியாது. அது இயற்கைக் கவிஞன் இதயத்திலிருந்துதான் எழவேண்டும்.

அவன் இலக்கணத்தைக் கட்டி இழுக்கமாட்டான்; உவமானத்தைத் தேடித் திரியமாட்டான்; கதை கவிதை கட்டுரை இயற்றுவதற்காகப் பதங்களை துரத்தித் திண்டாட மாட்டான். இயற்கை அழகில் ஈடுபட்டு அதன் இன்பத்தை அள்ளிப் பருகவே அவன் உள்ளம் துடிதுடித்து நிற்கும். அந்தத் துடிப்பிலெழும் உணர்ச்சி அலைகளை உருவம் அமைத்து சுத்தமான ரசங்களை கிண்டிவிடச்செய்வான். தான் அனுபவித்த இன்ப உணர்ச்சியை, பாவம் குன்றாது பிறர் அனுபவிக்கும்படி சரள நடையில் எடுத்துத் தருவான். துன்பத்தையும் இன்பமாகக் காட்டி சொக்க வைப்பான். மனித குழாங்கள் மகிழ்ச்சியிலேயே அவனது உள்ளம் வட்டமிட்டு உலாவும். இவனைத்தான் இயற்கைக் கவி என்று சொல்லுகின்றோம்.

இயற்கையழகில் சொக்கிக்கிடப்பதாலும் துன்பத்தை இன்பமாகக் காட்டி கவிதை பாடுவதாலும் மறுமலர்ச்சி உலகைச் சிருஷ்டிக்கமுடியாது. அது

புரட்சி மனப்பான்மை படைத்த இலட்சியக் கவியால்தான் முடியும் என்ற விவாதம் மகா கவி பாரதியார் பாடத் தொடங்கிய அன்றே முடிவடைந்துவிட்டது. இயற்கைக் கவிஞனே இலட்சியக் கவிஞனாக இருக்கமுடியும். கவிதைகளுக்கு ஜீவனும் அவனாலேதான் கொடுக்கமுடியும் என்ற உண்மையை ஐயம் திரிபு இல்லாமல் நன்கு நிரூபித்து காட்டிவிட்டார். இயற்கைக் கவிஞர் இதயங்களைத் தட்டியெழுப்பி இயற்கையும் இலட்சியமும் சேர்ந்த மறுமலர்ச்சிக் கவிஞர்களாக மலரச்செய்துவிட்டது அந்தப் புதுமைக்கவிஞரின் தனி நடை.

இந்நூல் ஆசிரியர் ஸ்ரீ பாவலர் இலக்கிய நடையில் இயற்கையும் இலட்சியமும் ஒன்றிலொன்று ஐக்கியப்பட்டு மறுமலர்ச்சி வாடை வீசுவதைக்கண்டு மகா கவி பாரதியை நினைவூட்டுகிறது.

தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக என்ற தமிழர் பண்பாட்டிற்கேற்ப பல்வேறு சந்தர்ப்பங்களிற் பாடிய பாடல்களிற் சிலதைச் சேர்த்து "கவிதை மடல்" என்ற பெயரோடு இச்சிறு நூலைப் பிரசுரித்து தமிழன்பர்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

கதை, கவிதை, கட்டுரை, நாடகம் போன்ற பல்துறைநூற்கள் அடுத்தடுத்து வெளியிட தமிழ்ப் பெருமக்களின் பேராதரவை எதிர்பார்க்கின்றோம்.

பதிப்பாசிரியர்கள்

# முன்னுரை

உணர்ச்சி வயப்படும்போது, இதய அலைகளை உருவந் தீட்டிப் பார்ப்பதில் ஒரு அலாதியான ஆசை. அந்த ஆசையின் விளைவுகளே இந்தப் பாடல்கள். இவை தமிழ்த்தாயின மேனியை அழகுபடுத்தும் ஒளிபொருந்திய மணிகள் அல்ல என்பது எனக்குத் தெரியும். எனினும் தன்னிடத்துள்ள பொருள்களைத்தானே காணிக்கை செலுத்தமுடியும்! "குழந்தை விளையாடுகிறது" என அன்னை அரவணைப்பாளாக.

கலை அன்பர்களான ஸ்ரீ கே. ஆர். செல்வநாதன், ஸ்ரீ எஸ். சங்கரலிங்கம் இவர்கள் 'தங்கள் பாடல்களிற்சிலதை வெளியிட விரும்புகிறோம்" என்றார்கள். "ஆயிரம் நமஸ்காரம் உங்கள் முயற்சிக்கு" என நன்றியறிதலோடு சம்மதித்தேன்

தமிழ் அன்பர்களின் இதய அடிவிதானம் தொடும் பாக்கியம் கிடைக்குமாயின் அதுவொன்றே நான் அடைய விரும்பும் பேறு. அன்பு வணக்கம்.

சுத்தமல்லி
5-5-'49

ஆக்கியோன்

# பொருளடக்கம்


| பாட்டு | | பக்கம் |
|---|---|---|
| 1 | சரஸ்வதி ஸ்தோத்திரம் | 9 |
| 2 | திருமகள் | 10 |
| 3 | செந்தமிழ்நாடு | 12 |
| 4 | அன்னை காதல் | 15 |
| 5 | பொழிவாய் மழையே? | 16 |
| 6 | வளர்வாய் பனையே? | 18 |
| 7 | அன்பின் இதயம் | 19 |
| 8 | ஆண்டவனைக் கண்டேன் | 21 |
| 9 | இன்பத்தைக் கண்டேன் | 22 |
| 10 | தாழ்த்தப்பட்டார் சுதந்திரப் பிரதிக்ஞை | 24 |
| 11 | தாய்மையின் பெருமை | 25 |
| 12 | சோம்பலை நீக்கடா தம்பி! | 27 |
| 13 | வளரும் இதயம் | 28 |
| 14 | விளையாட்டுக் கண்ணன் | 29 |
| 15 | ராதையின் காதல் | 31 |
| 16 | கோபியின் கனவு | 32 |
| 17 | காதலியின் ஏக்கம் | 34 |
| 18 | பெண்ணுரிமைக் கும்மி | 35 |
| 19 | தீண்டாதோர் சாட்டை | 36 |
| 20 | என்ன வழக்கம்? | 37 |
| 21 | எத்தனை ஜாதியடா! | 38 |
| 22 | பாட்டாளி அனுபவம் | 40 |
| 23 | எம்மை மறுப்பதென்னே? | 42 |
| 24 | ஒழிந்தது பழமை | 43 |
| 25 | வெளிநாட்டுப் பஞ்சமர் | 45 |
| 26 | வெட்கமுண்டாகுதடா! | 47 |
| 27 | கொட்டுமுரசே! | 48 |
| 28 | தேடிவைத்தவனும் சிலவுசெய்தவனும் | 49 |
| 29 | வாத்தைத் திருடிய நரி | 51 |
| 30 | கூலிப் பக்தி | 56 |
| 31 | இளைஞன் என்று சொல்லடா! | 59 |
| 32 | வானத்து முல்லை | 60 |
| 33 | மாலைப்பொழுது | 61 |
| 34 | கோபிக்க வேண்டுமம்மா! | 62 |
| 35 | ஈடற்ற பொக்கிஷம் | 64 |
| 36 | இந்தக்கோபம் ஆகுமா? | 66 |
| 37 | காலை தெரிந்தது எப்படி? | 68 |
| 38 | பகை வந்ததேன்? | 69 |
| 39 | ஆண்மையும் பெண்மையும் | 71 |
| 40 | பறக்கும் இதயம் | 74 |
| 41 | நாமும் அந்த இனங்கள்தான் | 75 |
| 42 | ஏற்றுக்கு வேற்றுமை? | 78 |
| 43 | நாமே வகுத்துக்கொண்டோம் | 79 |
| 44 | விடுதலை வேண்டும் | 81 |
| 45 | நீ எஜமாட்டி | 82 |
| 46 | வாழ்க்கை செய் | 84 |
| 47 | ஆணும் பெண்ணும் | 85 |
| 48 | வாழிய செந்தமிழ் | 87 |

# சரஸ்வதி ஸ்தோத்திரம்

1 தாமரைப் பூவிலுள் ளாள்—இசைத்தமிழ்
தந்தஒ லியிலுள் ளாள்
பாமுறை யாயமை வாள்—சரஸ்வதி
பாதத்தைச் சிந்தைசெய் வோம்

2 வேதம்ம ருவிடு வாள்—பண்டிதர்கள்
வித்தையிற் சொக்கிடு வாள்
நாதத்தில் நின்றிடு வாள்—சரஸ்வதி
நாமத்தை உச்சரிப் போம்

3 வீணையில் நின்றொலிப் பாள்—உயர்கவி
வாணரை ஈன்றிடு வாள்
தோணுங்க லைகளி லே—பலவித
சோபிப்பை உண்டுசெய் வாள்

4 நூற்கள்அ மைந்திடு வாள்—சிந்தைசெய்வோர்
துண்ணறி வாய்விடு வாள்
ஏற்பவர்க் கீந்திடு வாள்—இதயத்தில்
இன்பத்தை ஊட்டிடு வாள்

5 சிற்பியின் கைகளி லே—நடந்தொரு
சிலையிற் றங்கிடு வாள்
அற்புத மென்றெவ ரும்—வியந்திட
ஆனந்தம் ஊட்டிடு வாள்

6 ஓவியன் நெஞ்சினி லே—உதித்திட்ட
உணர்ச்சி யாய்விடு வாள்
பூவிலுள் ளபொருட் கள்—ஒவ்வொன்றிலும்
புத்துயிர் பெற்றுநிற் பாள்

7 காவியன் நெஞ்சினி லே — இனியவோர்
கருத்தைத் தூண்டிவிட் டு
நாவின்வ ழிதோன் றி — மக்களுக்கு
நல்வழி காட்டிடு வாள்

8 கைத்தொழில் வாணிப மும் — ஒவ்வொருவர்
கற்குந்தொ ழில்களி லே
உய்யுங்க லாரா ணி — அவள்தரும்
உண்மையைக் கண்டுகொள் வோம்

## 2 திருமகள்

சோம்பல றியா த — உழவர்கள்
சிந்திய வேர்வையி லே
ஆம்பல்இ தழ்விரி ய — திருமகள்
ஆசனங் கொண்டிருப் பாள்

2 இல்லையென் னும்பதத் தை — இதயத்தில்
இல்லையாய்ச் செய்தவர் கள்
இல்லம்நி றைந்திருப் பாள் — அவள்தரும்
இன்பத்தைக் கண்டிடு வோம்

3 மூலப்பொ ருள்களி லே — அவள்செயும்
முத்துச்சி ரிப்பொலி கள்
ஞாலமெல் லாம்நிறை யும் — அதிலெழும்
நன்மையை உண்டிடு வோம்

4 நஞ்சைபுஞ் சைகளி லே — கதிரென
நின்றுகு லிங்கிடு வாள்
பஞ்சம்வி லக்கிடு வாள் — அவள்இரு
பாதத்தைச் சிந்தைசெய் வோம்



5 பாட்டாளி பெற்றெடுத் து — வளர்த்திட்ட
பைங்கிளி காதலி லே
நாட்டவர் சுற்றுகி றார் — அவளைநம்
நாயகி யாக்கிக்கொள் வோம்

6 காட்டும ரங்களி லே — கனியெனக்
காக்ஷிய ளித்திடு வாள்
நாட்டவர் நல்லுண வாய் — அமைந்தவள்
நட்பினைப் பெற்றிடு வோம்

7 சொல்லிலே தேன்குழை யும் — இனியவோர்
சிந்தைப டைத்தவ ளாய்
இல்லறஞ் செய்திடு வாள் — திருமகள்
இன்பத்தை உண்டிடு வோம்

8 கொஞ்சும்ம ழலைமொ ழி — உதிர்த்திடுங்
குழந்தை யாகவந் து
நெஞ்சிலோர் பாசம்வைக் கும் — திருமகள்
நேசத்தைப் போற்றிடு வோம்

9 ஈகையில் நின்றிடு வாள் — அதிலொரு
இன்பத்தைக் காட்டிடு வாள்
வாகைய ணிந்தவர் கள் — இருதய
வாசத்தில் ஆசையுள் ளாள்

10 நத்தும்பொ ருள்களெல் லாம் — திருமகள்
நல்லுருப் பெற்றுநிற் கும்
அத்தைவ ணங்கிடு வோம் — உலகியல்
ஆனந்தம் என்றுசொல் வோம்.

# 3 செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெங்கள் சீரிய நாடு
தேனிலும் இன்சுவை தேங்கிய நாடு
தந்தையர் நாடெங்கள் தனிப்பெரும் நாடு
தாயினும் அன்புடை யார்செறி நாடு
மந்திரம் போன்றசொன் மாரிகாண் நாடு
மட்டடங் காக்கலை மண்டிய நாடு
பந்தம்வ ளர்த்தப ழம்பெரு நாடே!
பாக்கிய சாலிகள் யார்யெமக் கீடே?

2 சங்கங்கள் மூன்றையுங் கண்டஇன் நாடு
சாத்திர நுட்பங்கள் ஆய்ந்தநன் நாடு
எங்கினும் நீதிகள் ஈந்தபொன் நாடு
இணையில்லாக் காப்பியம் இயற்றிய நாடு
தங்குகீட் கணக்கினைச் சமைத்தஇந் நாடு
சமர்த்தர்மூ வேந்தர்கள் ஜெனித்தவன் நாடு
பங்கமில் லாதயெம் பழம்பெரும் நாடே!
பாரினில் யாவருண் டெங்களுக் கீடே?

3 வள்ளுவ ரின்குறள் வழங்குபொன் நாடு
வான்புகழ் காண்கம்பன் வாழ்ந்தநன் நாடு
கொள்ளைகொள் ளும்மணி மேகலை நூலும்
கொஞ்சும்சி லப்பதி காரமென் நூலும்
துள்ளிப்ப தம்விளை யாடிடும் நாடு
தேனொத்த பாக்களைத் தெளித்தஇன் நாடு
தெள்ளுநந்த மிட்கலை செறிந்தயெம் நாடே!
தேயத்தில் யாவருண் டெங்களுக் கீடே?



4 பன்னிரு திருமுறைப் பசுந்தமிட் பாவும்
பாவினம் உயிர்த்தெழு திருப்புகட் பாவும்
சொன்னயம் நடம்புரி திருவருட் பாவும்
சுருதியோ டுறவுகொள் பிரபந்தப் பாவும்
இன்னமு தாமெங்கள் பாரதி பாட்டும்
என்றென்றும் புத்தினி மைவந்து ஊட்டும்
பன்னரும் நூல்களாற் பரந்தயெம் நாடே!
போட்டிசெய் வார்எவர் தாமெமக் கீடே?

5 தென்பெண்ணை இனியபா லாறுகா வேரி
தேன்தமி ழின்சுவை கண்டதோர் வைகை
தன்னெழி லால்மனச் சாந்தியை நல்கும்
தாமிர பரணியென் தனிச்சிறப் பெய்தும்
உன்னத நதிபல உருவும்பொன் நாடு
உள்ளத்தி லேஇன்பம் ஊறச்செய் நாடு
இன்னுடை நாடிவை எழில்பெறும் நாடே!
எத்தகை யோர்கள்தாம் எங்களுக் கீடே?

6 கற்புடை யார்வொளிக் கதிர்விடு நாடு
கடவுளாய்ப் புருடரைக் கருதிய நாடு
பொற்புறுங் காதலர் பொலிந்தஇன் நாடு
புத்தியும் வாழ்க்கையும் பொருந்திய நாடு
நற்செயல் யாவையும் ஓர்உரு வாக்கி
நாரியர் என்றுபேர் நல்கிய நாடு
அற்புத நாடெங்கள் அன்புறு நாடே!
அவனியி லேயெமக் காவரே ஈடே?

7 கன்னியர் மங்கள கோஷஞ்செய் நாடு
குயிற்றொனி மாதர்கள் கானஞ்செய் நாடு
மின்னிடை யோர்நட னம்புரி நாடு
மென்கலை ஆயிரம் விரிந்தஇன் நாடு
புன்னகை யோடுப சாரஞ்செய் மாதர்
புத்தெழில் கொட்டிய புண்ணிய நாடு
உன்னத நாடெங்கள் உயர்பெறு நாடே!
உலகினில் யாவருண் டெமக்கிதில் ஈடே?

8 பக்திர சம்பெருக் கோடிய நாடு
பாபம்என் றுற்பய மெய்திடு நாடு
சத்திய மேஜெய மென்றவர் நாடு
தரும மேதலை காக்குமென் நாடு
உத்தம வாழ்க்கையில் ஊறிய நாடு
உள்ளத்தே மாசுப டாதவர் நாடு
முத்திவ ழியேமுன் னேறிடும் நாடே!
முத்தமிழ் நாட்டிற்கு இணைஎவர் நாடே?

9 வந்தவி ருந்தினர் தமைஉப சரிப்பார்
வரவிருப் போர்களின் வழிஎதிர் பார்ப்பார்
சிந்தையில் அன்பியல் செறிந்ததி னாலே
சொற்களெல் லாம்அன்பிற் றோய்ந்தபூப் போலே
பந்தமி ளிர்ந்திடப் பேசுவோர் நாடு
பற்பல ஒழுக்கங்கள் பயின்றபொன் நாடு
இந்திய நாடெங்கள் இன்னுயிர் நாடே!
இத்தகை வாழ்க்கையில் யார்எமக் கீடே?



10 மங்கள வாத்தியம் மலிந்தநன் நாடு
மறையவர் சோஷங்கள் வான்எட்டும் நாடு
சங்குகள் நல்லொலி செவிபடு நாடு
ஜெபதபம் செய்வதிற் றேர்ந்தபொன் நாடு
எங்கினுங் கோவில்கள் எழுப்பிய நாடு
என்றென்றும் பூஜைக்கேற் பாடுசெய் நாடு
பொங்கிய பால்மனத் தோருடை நாடே!
பூமியில் யாவர்கள் தாமெமக் கீடே?

# 4 அன்னை காதல்

அன்னையிற் காதலெம் ஆருயிர்க் காதல்
அத்திழந் தாலெந்தன் ஆனந்தம் சாதல்
இன்னொரு காதலெம் வாழ்கையி லேது?
இன்பங்கொ டுப்பவள் அன்னைபல் லாது!
பன்னருஞ் செல்வங்கள் படைத்தவ ரேனும்
பற்பல இன்பங்கள் சுவைப்ப ரேனும்
அன்னவர் வாழ்க்கைபா ழாமெனக் கண்டேன்
ஆகையி னாலன்னை காதல்நான் கொண்டேன்

2 செந்தமிட் தேவியெம் தெய்வீகத் தேவி
சிந்தையி லேஇன்பம் ஊட்டிய தேவி
மந்திரம் போன்றசொல் மழையெனப் பெய்தாள்!
மதுவுண்ட வண்டென மயங்கிடச் செய்தாள்
இந்தியத் தாயுள்ளம் ஈர்த்தநற் தேவி
ஏழைக ளின்உண்மை வாழ்வின்சஞ் சீவி
பந்தம்இ ணைந்தபின் பிரிந்திடப் போமோ?
பாலர்கள் தாய்க்குச்செய் பக்திவீண் ஆமோ?

3 இந்தியத் தாயவள் இன்னுயிர்த் தாயே
இதயத்து டிப்பிலே இணைந்தநற் தாயே
சொந்தம தாய்வந்த தூயவள் தேவி
சுந்தர வீரரைத் தோற்றுமோர் ஆவி
சிந்தனை செய்பவர் சிந்தையில் வாழ்வாள்
சீரியர் வாழ்க்கையிற் திறன்படத் தோய்வாள்
மந்திரம் போன்றவள் நாமத்தைச் செபிப்போம்
மாதாபி மானமில் லாநெஞ்சைச் சபிப்போம்

4 இதந்தரு வாழ்க்கையை எங்களுக் கீயும்
என்னுமோர் எண்ணத்தில் இருதயந் தோயும்
சுதந்தர தேவியெம் ஜீவனின் ஜீவன்
சொல்லவொண் ணாதவோர் ஆவலின் ஜீவன்
அதந்தரு வறுமைநோய் அகற்றுமோர் தேவி
அடிமையொ ழித்திடும் அரியசஞ் சீவி
இதயத்தி லேயொரு இருப்பிடஞ் செய்வோம்
இல்லையெ னின்வாழ்க்கை இழந்தவர் ஆவோம்.

## 5 பொழிவாய் மழையே!

மழையே மழையே வருவா யே!
மண்ணின் மீது பொழிவா யே!
உழவர் தாகந் தீர்ப்பா யே!
உணவுப் பொருள்கள் தருவா யே!

2 உழவர் பெருமை உன்பெரு மை!
உலகின் ஜீவன் உன்ஜீ வன்!
அழகின் இயல்கள் உன்இய லே!
ஆவதும் அழிவதும் உன்செய லே!



3 எங்கும் முகத்தைப் பார்ப்பா யே!
இளந்தளிர் வாடல் தவிர்ப்பா யே!
தேங்கும் நிலைகள் நிறைப்பா யே!
செல்வங் கொழிக்கச் செய்வா யே!

4 பூம்பொழில் குலுங்கச் செய்வா யே!
புதுமலர் பொடிக்க அருள்வா யே!
தேம்பல வாங்கு செறிந்தோங் கி
திருமகள் தவழ இசைவா யே!

5 பசும்புல் நின்னை வரவேற் கும்
பற்பல உயிரும் கைகூப் பும்
விசும்பிற் கறுத்து இடிமுழங் கி
மளமள வென்று கொட்டா யோ!

6 பற்பல உணவு தருவா யே!
பஞ்சப் பிணியை ஒழிப்பா யே!
நற்செய லாளர் கடன்காட் டி
நாட்டிற் குன்செயல் ஆற்றா யோ!

7 வாடும் உலகை மகிழ்விக் கும்
வரத்தை யுடையாய் நீயன் றோ?
தேடும் படியாய்ச் சுணங்கா மற்
சளசள வென்று பொழியா யோ!

8 வெப்பும் வெடிப்பும் மறைப்பா யே!
விழலையும் பசுமை செய்வா யே!
ஒப்புயர் வற்ற வான்ஊற் றே!
உறுதுயர் நீக்க வாவா வா!

## 6 வளர்வாய் பனையே!

பனையே பனையே வளர்வா யே!
பயன்கள் நிறையத் தருவ யே!
உனையே கற்பக விருட்சமென் பார்
உலகில் நின்பெயர் அழிவே து?

2 பதநீர் கள்ளுஞ் சுரந்தா யே!
பலரின் இதயங் கவர்ந்தா யே!
இதமுறும் மருந்தாய் அமைந்தா யே!
ஏழைகள் உணவாய் வந்தா யே!

3 நுங்கும் பழமும் தந்தா யே!
ருசிக்கும் பன்னடை ஈந்தா யே!
பொங்கற் கிழங்கும் கொடுத்தா யே!
பூந்திபோற் றவணும் வைத்தா யே!

4 வெல்லமும் கற்கண்டும் தந்தா யே!
விதவித வுணவுகட் குகந்தா யே!
சொல்லிலும் உனையே குறிப்பார் கள்!
சுவைகட் கெல்லாம் அரசா வாய்!

5 வீடுகள் வேய வோலைதந் தாய்
வரிச்சியும் நாரும் உதவுகின் றாய்!
மாடிவீ டெழுப்பத் தடியீந் தாய்!
மரவகை களிலே சிறப்பெய் தாய்!

6 பெட்டிகள் கயிறு விசிறிமு றம்
பாய்முத லான சிறுபொருட் கள்
செட்டாய் வாழ்க்கை நடத்துப வர்
தேவையைப் பூர்த்தி செய்தா யே!



7 விறகும் கதிரும் கொடுத்தா யே!
மெல்லிய குருத்தும் தந்தா யே!
வரம்போல் நின்பால் மருந்தன் றோ!
வையம் உனக்கென் கடன்செய் யும்!

8 எழுதும் ஏடுகள் எமக்கீந் து
எல்லாத் துறையிலும் உதவுகின் றாய்
தொழுவோம் நன்றி இதயத் தால்
தொன்மை வாய்ந்த பனைமர மே!

## 7 அன்பின் இதயம்

அன்பின்இ தயத்தைக் காண்கின்றேன்—கண்ட
ஆசையி லேஇன்பங் கொள்கின்றேன்—உண்மை (அ)

சின்னஞ்சி றியகு ழந்தைகள்—ஒன்று
சேர்ந்திட வேவிளை யாட்டுகள்—ஆட
என்னமெல் லாமலோ பேசுறார்—இதில்
எத்தனை அன்பென்று பாருங்கள்!—உண்மை (அ)

2 "அம்மா"வென் றேபசு கத்துது—கன்று
அண்மையி லேவந்து நிற்குது—பசு
தம்மனம் போலவே நக்குது—இந்தத்
தாய்ப்பசு அன்பிற்கி ணையுண்டா!—உண்மை (அ)

3 குஞ்சுக ளுக்குஇ ரைகளை—கோழி
கொத்திக்கொத் திக்கொடுக் கின்றது—உயிர்
அஞ்சும்ப டிக்குப்ப ருந்தொன்று—சாட
ஆபத்தை ரெக்கையாற் காத்திடும்—உண்மை (அ)

4 வீட்டுக்கு ருவியின் கூட்டிலே—குஞ்சை
வீணரொ ருவன்எ டுக்கிறான்—அந்தக்
கூட்டின்வெ ளியேகு ருவிகள்—கூடிக்
கூச்சலி டுகின்ற சோகத்தில்—உண்மை (அ)

5 ஊணும்உ றக்கமும் அற்றவள்—நெஞ்சில்
ஊறிய ஆவலை விட்டவள்—மனம்
கோணலில் லாமல்ந டந்திடும்—அன்னை
கொண்டவோர் அன்பிலென் இன்பமே!—உண்மை (அ)

6 உச்சிபி ளக்கும்வெ யிலிலே—பல
ஊர்கள்அ லைந்துக ளைத்தவன்—மணம்
நிச்சயஞ் செய்துளேன் பெண்ணிற்கு—என்று
நிம்மதி காணலும் அன்பன்றோ?—உண்மை (அ)

7 எட்டுமட் டுங்காட்டிற் பறந்து—இடர்
ஏற்பட்ட தற்கெல்லாம் அசைந்து—குஞ்சின்
பட்டினி நீக்குமோர் பறவை—மனப்
பான்மையில் எத்தனை அன்பியல்!—உண்மை (அ)

8 எத்தனை அன்புஇ தயங்கள்!—இதை
எப்படி ஒவ்வொன்றாய்ச் சொல்வது?—வாயால்
அத்தனை யும்ஒரு சொல்லிலே—சொல்லின்
அன்புஉ லகமே என்னலாம்—உண்மை (அ)



# 8 ஆண்டவனைக் கண்டேன்

ஆண்டவ னைத்தே டி—நான்
அங்குமிங் கும்அலைந் தேன்
தீண்டாமை என்கின்ற
தீவினை மூழ்கிய
திக்கற்ற பஞ்சம னின்—இதயத்திற்
தேடிப்பி டித்துக்கொண் டேன்

2 அன்றுஇ தழ்விடுத் த—சிறு
அல்லிம லரென வே
ஒன்றையுஞ் சிந்தனை
ஊக்காத பாலகன்
உள்ளப்பு துமல ரில்—ஆண்டவன்
ஓம்புதல் கண்டுகொண் டேன்

3 கள்ளங்க படமற் ற—இளம்
காதலர் வாழ்க்கையி லே
உள்ளங்க லந்தின்பம்
ஓடிய சக்தியில்
ஊடுரு வும்பொரு ளாய்—ஆண்டவன்
உள்ளதைக் கண்டுகொண் டேன்

4 தேடிய செல்வமெல் லாம்—பிறர்
தின்றுகொ ழுக்கவிட்டு
வாடிவ தங்கிய
வாழ்க்கையிற் றுன்புறும்
வாலிபன் நெஞ்சினி லே—ஆண்டவன்
வாழ்வதைக் கண்டுகொண் டேன்

5 கொண்டவன் தாக்கிடி னும்—பதிற்
கூறாமல் வாழ்வியற் றி
உண்டோஎன் நாதனின்
உள்ளத்திற் கீடென்னும்
உத்தமி நெஞ்சினி லே—ஆண்டவன்
உண்டெனக் கண்டுகொண் டேன்

6 தன்னலம் பேணலின் றி—பிறர்
சங்கடந் தீர்ப்பது வே
உன்னத வாழ்வென
வாழ்க்கையிற் காட்டிய
உத்தமர் நெஞ்சினி லே—ஆண்டவன்
உறைதல் கண்டுகொண் டேன்

## 9 இன்பத்தைக் கண்டேன்

இன்பத்தைத் தேடிஅ லைந்திட்டேன்—வாழ்க்கை
இன்பம யமென்றே தேர்ந்திட்டேன்—உண்மை(இ)

தந்தைமுன் கைகட்டி நிற்பதும்—அவர்
சாற்றிய நன்மொழி கேட்பதும்—ஓடும்
சிந்தையை வோர்வழி நாட்டலும்—ஆன
தேர்ச்சியைக் காணலும் இன்பமே—நாளும் (இ)

2 உண்ணவு ணவின்றி வாடிய—ஒரு
உத்தமன் பக்கத்தில் ஏழைப்பெண்—நின்று
கண்ணீர்த தும்பும்மு கத்துடன்—துயர்
காட்டிய அன்பிலும் இன்பமே—கண்டேன் (இ)

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

3 பாட்டாளி கேடிய செல்வத்தை—ஒரு
பாதகன் வஞ்சித்துக் கொள்ளவும்—அதை
வீட்டுப்பெண் ணிடங் கூறவும் —அவன்
விம்முந்து யரிலும் இன்பமே—உண்டு (இ)

4 தேசத்திற் காய்ச்சிறை போயினும்—தங்கள்
செல்வமெல் லாம்செல வாயினும்—இது
ஈசனின் கட்டளை யாமென—துயர்
இன்றிஉ ழைப்பதும் இன்பமே—கண்டேன் (இ)

5 தொண்டர்ப டையுடன் பஞ்சமர் -வாழும்
சேரிசென் றேசுத்தம் செய்வதும்—யாரும்
அண்டப்ப டாதவர் நெஞ்சிலே—புது
ஆர்வம்வி தைப்பதும் இன்பமே—கண்டேன் (இ)

6 கல்விஅ றிவற்ற ஏழைக்கு—தமிழ்க்
கற்றுக்கொ டுத்துஉ யர்த்தலும்—கற்ற
புல்லிய னுக்குஉ யர்ந்தவை—சொல்லிப்
பூரிக்கச் செய்வதும் இன்பமே—கண்டேன் (இ)

7 துன்புறு வோனுக்கி ரங்கலும்—ஒரு
தூயவ ழிகாட்டி நிற்றலும்—தூய
அன்பிலே சிக்கலைத் தீர்த்தலும்— பல
ஆபத்தைக் காத்தலும் இன்பமே—கண்டேன் (இ)

8 நோய்படு வோர்களைக் காத்தலும்—உயர்
நுண்ணறி வோர்களைப் போற்றலும்--பெற்ற
தாய்த்திரு நாட்டைஉ யர்த்தலும்—அதைச்
சார்ந்துயிர் வாழலும் இன்பமே—கண்டேன் (இ)

9 உள்ளங்கி ளர்த்துங்க விகளை—உயிர்
ஓவியங் காட்டுஞ்சு வைகளை—தேடி
அள்ளிச்சு வைத்துக்க ளிப்புறும்—ஒரு
ஆசையிற் றேங்கிய தின்பமே—கண்டேன் (இ)

10 எத்தனை இன்பங்கள் நிற்குது?—இதை
இல்லைஎன் றெப்படிச் சொல்வது?—தங்கள்
சித்தத்தைப் பக்குவம் செய்திடில்—இன்பம்
தேங்கிவ ழிந்திடும் வாழ்க்கையில்—உண்மை (இ)

---

## 10 தாழ்த்தப்பட்டார் சுதந்திரப் பிரதிக்ஞை

இராகம்: செஞ்சுருட்டி, தாளம்: ஆதி

### பல்லவி

சுதந்திரம் வாங்காம லிறப்பேனோ?—இந்த
ஜென்மத்தை வீணாகக் கழிப்பேனோ? - நான் (சு)

### அனுபல்லவி

உடலும் பொருளும் ஆவியும் இதற்கே
கடவுள் படைத்த காரணம் அறிந்தே (சு)

### சரணம்

1 சொல்லும் செயலும் சுதந்திர மகட்கே
அல்லும் பகலும் அர்ப்பணஞ் செய்தே (சு)



2 கற்களும் முட்களும் காணப் படினும்
நற்பயன் கருதி நடப்பேன் அடைவேன் (சு)

3 சகிப்பும் பொறுப்பும் தனதெனக் கண்டேன்
தகிப்பும் குளிப்பும் சமமெனக் கொண்டேன் (சு)

4 பெற்றயென் தாயும் பிறந்தபொன் நாடும்
உற்றவெந் துயரை விலக்கலென் கடனே (சு)

5 உண்மையும் நேர்மையும் உள்ளொளி காட்ட
கண்ணிய வழியைக் கடைபிடித் தெமது (சு)

6 கத்தியும் வேலும் கொலைத்தொழி லின்றி
சத்தியம் ஒன்றே ஜெயமென நம்பி (சு)

7 தூய்மையும் தியாகமும் சோதரப் பாசமும்
வாய்மையும் நிறைந்தால் வழுக்குதல் உண்டோ? (சு)

8 அடிமையின் இழிவை அறிந்தேன் வெறுத்தேன்
படிமிசை யாமும் பயன்பெற நினைத்தே (சு)

---

## 11 தாய்மையின் பெருமை

தாய்மைம தித்திடு வோம்—அதன்பெரும்
சக்தியைக் கண்டிடு வோம்
செய்மையைப் பண்படுத் தும்—உயரிய
சேவையைப் போற்றிடு வோம்

2 கோபக்க னலெழுப் பும்—சிறுவர்கள்
குறும்புச் செய்கையெல் லாம்
தாபத்தைக் காட்டா மல்—அவைகளைச்
சகித்துக் கொண்டிடு வாள்!

3 பண்பட்ட சாதுவைப் போல் —சாந்தம்நிறை
பொக்கிஷ மாயமை வாள்!
புண்பட்ட நெஞ்சினை யும் —குழந்தைகள்
பாராது மூடிக்கொள் வாள்!

4 துன்பம்ம றந்திடு வாள்!—குழந்தைகள்
தொல்லையி லேசினக் காள்!
அன்புரு வாயமை வாள்!—சிறுவர்கள்
ஆசையைப் பூர்த்திசெய் வாள்!

5 நித்திரை யைத்துறப் பாள்!—சுவைத்திடும்
நன்மைம றந்திடு வாள்!
புத்திரர் நன்மைக்கென் றே—ஜீவியநாட்
பூராவும் போக்கிடு வாள்!

6 ஒட்டும்இ தயத்தி லே—உயரிய
உண்மைகள் புக்கிடு வாள்!
கட்டுக்க டங்கா த—நல்லநல்ல
காளைகள் தோற்றுவிப் பாள்!

7 வீரரைத் தோற்றுவிப் பாள்!—உயரிய
விற்பனர் தோற்றுவிப் பாள்!
தீரரைத் தந்திடு வாள்!—அறம்வளர்
சீலரை யுந்தரு வாள்!

8 நாட்டைவ ளப்படுத்தும்—பல
நன்மைகள் தாமையி னால்
ஊட்டப்ப டும்பொறுப் பை—தெரிந்துநாம்
உள்ளத்திற் பூஜைசெய் வோம்



## 12 சோம்பலை நீக்கடா தம்பி!

சோம்பலை நீக்கிட டா!—மனச்
சோர்வைய கற்றிட டா!
ஆம்பல்ம லர்போ லே—புது
ஆனந்தம் பூத்திட டா!

2 செய்யுந்தொ ழில்களி லே—மனம்
சென்றுற சிக்கவிட் டால்
நொய்யும்இ ருதய மும்—அதன்
நுட்பத்தைக் கண்டெழு மே!

3 ஓடிக்க ளைத்தநெஞ் சை—கொஞ்சம்
ஓய்வுற விட்டுவிட் டு
ஆடிக்க ளிக்கவி டு—புது
ஆசையை மூட்டிவி டு

4 உள்ளம்ப திந்தவொன் றில்—கொஞ்சம்
ஊக்கமெ டுத்துக்கொண் டால்
துள்ளிவி ளையா டும்—கொண்ட
சோம்பலை நீக்கிவி டும்

5 சோம்பலி ழுக்கல்ல வோ?—வாயாற்
சொல்லவும் நாணலை யோ?
வீம்புகள் பேசிடு வார்—முன்னே
வெட்கம டைவதோ டா?

6 ஏதும ரியதில் லை!—செயல்
எத்திலுந் தோல்வியில் லை!
போதுமென் றெண்ணிவி டும்—மனம்
பெற்றவர் யாருமில் லை!

7 சோரும்ம னத்திடை யே—வீரர்
செய்கையைக் காட்டிட டா!
கோரும்ப யன்பெறு வாய்—ஐயம்
கொஞ்சமும் வேண்டாம டா!

8 வாழ்க்கைமு றையிதெ டா!—உன்னால்
வையம்வ ளருமெ டா!
தாழ்த்தப டவிரும் பா—மனம்
சமைத்துக் கொண்டிட டா!

## 13 வளரும் இதயம்

வெந்ததைத் தின்பதுந் தூங்குவ தும்—தங்கள்
வாழ்க்கையென் றெண்ணிய மானிட ரில்
சொந்தம ரியாதை காத்துநிற் போன்—கொஞ்சம்
சிந்தைவி ரிந்தவன் என்றிட லாம்

2 ஈன்றகு டும்பத்தின் மானம்பே ண—சொந்த
இன்னுயிர் ஈஅபி மானனி லும்
ஊன்றுங் கிராமத் தபிமா னன்—இன்னும்
உள்ளம்வி ரிந்தவன் என்றிட லாம்

3 சொந்தம காணத்த பிமா னன்—கொண்ட
தூயஇ ருதயப் பண்பினி லும்
முந்திய தேசத்த பிமா னன்—உள்ளம்
மேலும்வி ரிந்ததாய்க் கூறிட லாம்

4 எல்லாஉ லகஅ பிமா னன்—கொண்ட
ஏகஇ ருதயப் பண்பினி லும்
புல்லுயிர் மீதும்அ பிமா னம்—கொள்ளும்
பேற்றுடை யோனே பெரும்இத யோன்



5 இன்னஅ பிமானன் என்பதொன் றே—இவன்
இப்படிப் பட்டவன் என்றுகாட் டும்
தன்னைப்பி ரபல்யன் ஆக்கிக்கொள் வோம்—இதைச்
சிந்தனை செய்திடல் முக்கிய மே

6 சிந்தைவ ளர்ந்தவர் ஆகிவிட் டால்—நாட்டின்
தீங்குகள் ஓங்கவ ழிகள்உண் டோ?
இந்தநி லைஎய்துங் காலத்திற் கே—செல்ல
யாரும்வி ழைந்திடக் கூவுகின் றேன்.

## 14 விளையாட்டுக் கண்ணன்

### கிளிக் கண்ணி

வேய்குழற் கண்ண னடி!
வேடிக்கை மோக னடி!
ஆய்மயில் வண்ண னடி!—சகியே
ஆனந்தந் தருபவன் டி! (வே)

2 தாமரைப் பொய்கை யிலே
சேர்ந்துவிளை யாட யிலே
பூமறைமு கத்தி லே—சகியே
புனலைஎ றிந்தா னடி! (வே)

3 சேலையு டுத்தவொட் டான்!
சீவிக்குழல் பின்னவொட் டான்!
மாலைதொ டுக்கவொட் டான்!—சகியே
மாறிமாறி உலைத்திடு வான் (வே)

4 கூடிக்கோ லாட்ட டிப்பான்!
குழலால்ம யக்கிடு வான்!
வேடிக்கைப லதுஞ்செய் தே—சகியே
வெட்கப்படச் செய்வான டி! (வே)

5 உன்மீது ஆசை என்பான்
ஒருத்தியைக் கண்ணடிப் பான்
பின்னொரு பெண்ணிடத் தே—சகியே
புன்முறுவல் செய்வா னடி: (வே)

6 கட்டிய ணைப்பவன் போற்
கையைநீட்டி முன்வரு வான்
கிட்டநான் சென்றுவிட் டாற்—சகியே
கிண்டல்செய்தே மறைவான டி! (வே)

7 சடையைப்பி டித்திழுப் பான்!
தாடையிலே தட்டிடு வான்!
இடையிலே கையணைப் பான்!—சகியே
இச்சைகாட்டி வோடிடு வான் (வே)

8 அடர்ந்தசெ டிமறை வில்
ஆசைகாட்டிக் கூப்பிடு வான்
தொடர்ந்துநான் சென்றுவிட் டாற்—சகியே
தூரநின்று "வாடி" என்பான்! (வே)

9 காணுமி டங்களெல் லாம்
கன்னிகளை நிற்க வைத்து
வேணும்ப டியெது வும்—சகியே
விளையாடுங் கண்ணன டி! (வே)



## 15 ராதையின் காதல்

ஓடிவ ருகையி லே—புதியவோர்
உணர்ச்சி பொங்குத டா!
கூடிவி ளையா ட—இருதயம்
கும்மாளம் போடுத டா!

2 முல்லைச் சிரிப்பினி லே—இருதயம்
முற்றும்மல யிக்குத டா!
ஒல்லிய மேனிதொட் டால்—நரம்பிலே
ஓடுதே இன்பவெ றி!

3 தாவிக்கு திக்கையி லே—நின்கேசம்
தோளிற்பு ரளுத டா!
சோபிப்பைச் சொல்லுதற்கு—தகுந்தவோர்
சொல்லைநான் காணலை யே!

4 புத்தம்பு துமல ரோ—முகத்திலே
பொலியும் புத்தழ கு!
சித்தத்தில் ஆணிவைத் தே—அடித்திட்ட
சிரிப்பை எங்குகற் றாய்?

5 கன்னங்க ருவிழி கள்—இரண்டு
கடல்கள் போன்றத டா!
சின்னவ யததி னால்—இதயத்தைச்
சீக்கிரம் கொள்ளைகொண் டாய்!

6 கொவ்வைக் கனிஇத ழிற்—பதித்தவர்
கூடுமோ விட்டக ல?
அவ்வள வுஇன் பம்—இதழிலே
அரும்பி நிற்குத டா!

7 கண்டாலும் இன்பம டா'—உன்னழகைக்
கேட்டாலும் இன்பம டா!
உண்டான இன்பத்தி லே—வெறிகொண்டு
உழறிக் கொட்டுகின் றேன்!

8 முத்துச்சி ரிப்பினி லே!—இனியவோர்
மோகனப் பார்வையி லே!
சித்தங்க லங்குத டா!—உனைவிடச்
செல்வமும் வேண்டுமோ டா!

---

## 16 கோபியின் கனவு

காதல்வி ளையாட்டிலே
கருத்தைப்ப றிகொடுத்து
ஏதுமறி யாதவர்போல்—சகியே
எப்பொழுதும் நடித்தேனடி! (கா)

2 அன்னையின் பக்கத்திலே
அயர்ந்துநான் தூங்கயிலே
முன்னாலே கண்ணன்வந்து—சகியே
மெள்ளயென்னைத் தொட்டிழுத்தான் (கா)

3 ஓசைசி றிதுமின்றி
உலைந்தது யில்உடுத்தி
ஆசைப்பெ ருக்கினிலே—சகியே
அவ்வமயம் நடந்தேனடி! (கா)



4 பொழியும்நி லவினிலே!
பொங்கியெழுங் காதலிலே!
வழியுமோர் இன்பஊற்றை—சகியே
மட்டுக்கட்ட முடியுமோடி? (கா)

5 மோகனப் புன்னகையில்
மெய்மறந்து போனதினால்
ஏகஅவ் வெளியிலேயும்—சகியே
இச்சைகொண்டேன் கூடுதற்கு! (கா)

6 மென்கரந் தொட்டபோதே
மெய்சிலிர்ப் பெய்தகடி!
என்னகம்பு டைத்துக்கொள்ள—சகியே
"எங்கே!"என்று கேட்டேனடி (கா)

7 "காதல்வ யப்படடி
காமத்தை நீக்கிடடி
ஈதொன்றே இன்பம்' என்றான்—சகியே
என்னபதிற் சொல்வேனடி (கா)

8 "கண்ணாஉன் காதலிலே
கருத்தைஇ ழந்தேன்" என்று
புண்ணான இருதயத்தே—சகியே
பொங்கியதைச் சொன்னேனடி! (கா)

9 கனவில்நான் சொன்னசொல்லைக்
கேட்டுவிட்டாள் எந்தன் அன்னை
"உனக்கிது வேண்டாம்"என்றாள்—சகியே
உய்யும்வழி உண்டோசொல்வாய்! (கா)

## 17 காதலியின் ஏக்கம்

குட்டுக்கடங் காதகனை வெண்ணிலாவே! — அவர்
காதல்கொண்டே வாடுகின்றேன் வெண்ணிலாவே
எட்டநின்றுற் பார்க்கத்தூண்டும் வெண்ணிலாவே! — அவர்
என்னைப்பார்த்தால் வெட்கந்தோன்றும் வெண்ணிலாவே!
பட்டுக்கொண்டேன் அன்னவர்பால் வெண்ணிலாவே-அதன்
பந்தத்திற்குட் சிக்கிக்கொண்டேன் வெண்ணிலாவே!
தட்டிச்செல்லற் கூடவில்லை வெண்ணிலாவே!—கன்னித்
தன்மைகெட்டுப் போனதாலே வெண்ணிலாவே!

எதையெல்லாமோ பேசத்தோன்றும் வெண்ணிலாவே!—காணும்
இன்பம்வாய்த்தால் வாயடைக்கும் வெண்ணிலாவே
பதைபதைக்கும் கண்சுழலும் வெண்ணிலாவே!—பேசும்
பாக்கியத்தை நானிழப்பேன் வெண்ணிலாவே!
உதயகாலக் குமுதம்போல வெண்ணிலாவே!—அவர்
வருகைக்காகக் கார்த்திருந்தும் வெண்ணிலாவே!
இதயத்துள்ள ஆவலெல்லாம் வெண்ணிலாவே!—சொல்ல
இயலவில்லை என்னசெய்வேன் வெண்ணிலாவே?

கண்ணில்வந்து உட்புகுந்தார் வெண்ணிலாவே!—அந்தக்
காட்சியைம றப்பதெங்கே வெண்ணிலாவே!
எண்ணமெல்லாங் கொண்டகன்றார் வெண்ணிலாவே!-வேறு
என்னசெய்ய நெஞ்சிற்தோன்றும் வெண்ணிலாவே?
பண்படுத்தப்பட்ட நெஞ்சை வெண்ணிலாவே!-ஒரு
பார்வையால்ம யக்கிவிட்டார் வெண்ணிலாவே!
உண்மைக்காதற் சக்திகண்டேன் வெண்ணிலாவே!—காதல்
உண்டவர்க்கே உண்மைதோன்றும் வெண்ணிலாவே!



கட்டுப்பாடு கூடக்கூட வெண்ணிலாவே!—கொண்ட
காதல்நோயுங் கூடக்கண்டேன் வெண்ணிலாவே!
விட்டுவிட்டால் என்னகேடு வெண்ணிலாவே?-பலர்
வீண்புரளி செய்வதேனோ வெண்ணிலாவே!
நட்டம்பிறர்க் கென்னவுண்டு வெண்ணிலாவே?-காதல்
நட்பைஉண்டார் நீங்குவாரோ வெண்ணிலாவே?
திட்டம்ஒன்று காணவேண்டும் வெண்ணிலாவே!-நேரிற்
சொல்லவல்ல யாவருண்டு வெண்ணிலாவே?

---

## 18 பெண்ணுரிமைக் கும்மி

சாதஞ்ச மைக்கவுங் காமந்த ணிக்கவும்
தான்பிறந் தோரென்றே எண்ணிவிட் டார்
வேதம்வ ளர்க்கவும் வீரப்பா லூட்டவும்
வெளிவந் தோமென்றே கொட்டுங்க டி!

2 பிள்ளைஉ யிர்ப்பதும் வீட்டிற்கி டப்பதும்
பெண்கடன் என்றெமைப் பூட்டிவிட் டார்
உள்ளதொ ழில்கள னைத்தையுஞ் செய்திட
ஊக்கங்கொண் டோமெனக் கொட்டுங்க டி!

3 பொன்பணி பூணவும் பொம்மைபோற் காணவும்
பேதமை யாலெம்மைச் செய்துவிட் டார்
கன்னலி ளந்தமிழ்க் கல்வியின் இன்பத்தைக்
கண்டுகொண் டோமென்றே கொட்டுங்க டி!

4 காதலை ஊட்டவும் கற்பினை நாட்டவும்
கண்ணிய வாழ்க்கையிற் கூடுட டி
மாதரின் மேன்மைகள் காதலாற் சாமென்று
வழுத்தல் பேதமை வாதம டி!

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

5 துன்பம்வி ளைக்கவும் தொல்லையுண் டாக்கவும்
தோன்றிய பெண்ணென்றே சொல்லிவிட் டார்
அன்பைவி தைக்கவும் ஆருயிர் காக்கவும்
ஆனவள் பெண்ணென்றே கொட்டுங்க டி!

6 நம்பத்த காதவர்; நஞ்சினைப் போன்றவர்;
நாட்டைஅ ழிப்பவர் பெண்கள் என்றார்
வம்புக்கா ரப்பெண்கள் வயிற்றி லெப்படி
வாழ்ந்திருந் தீரென்றே கேளுங்க டி!

7 மாதர்க்க ணிகலம் பேதமை என்றிந்த
வையந்தெ ரியாமற் பூட்டிவிட் டார்
பூதலத் தேயுள்ள நீதிய னைத்தையும்
பார்த்துவிட் டோமென்றே சொல்லுங்க டி!

8 போகப்பொ ருளெனப் பெண்களை விற்றிட்ட
பேதையர் நாட்டைவிட் டோடிவிட் டார்
பாகம்உ டையவள் எத்திலு மென்கின்ற
பண்பமைந் தோர்களே வந்துவிட் டார்

## 19 தீண்டாதார் சாட்டை

உள்ளேவந்துவ ணங்கிடிற் தேவதை
ஓடுமோ? —அருள்—வாடுமோ?
கள்ளமற்றவோர் நெஞ்சின ரைக்கண்டாற்
கோபமோ?—மனஸ்த்—தாபமோ?

2 தீண்டும்பாம்பிலும் செல்வப டைப்பவன்
தீயனோ? —பொல்லாப்—பேயனோ?
பூண்டபக்தியல் காட்டின்வி ஷம்கண்ணுற்
பாயுமோ?—தெய்வம் - மாயுமோ?



3 இதயம்புண்பட எம்மைவொ துக்குதல்
ஏற்குமோ?—தெய்வம—பார்க்குமோ?
சிதையும்உள்ளங்கள் தெய்வத்தாற் செய்வது
சீலமோ?—நல்ல—காலமோ?

4 பக்திசெய்பவன் பாதைய டைப்பது
பாக்யமோ?—நல்லோர்—யோக்யமோ?
சக்தியைஇழி தன்மையிற் காட்டவோ
தங்குறீர்? - உள்ளம்—பொங்குறீர்?

5 நீதியென்பது கோவிலினும் இன்றி
நேர்வதோ?—நாங்கள்—சோர்வதோ?
ஜாதிவேற்றுமை தெய்வமும் பார்ப்பது
சத்யமோ?—பொய்மை—நித்யமோ?

6 மற்றநாட்டிலே இவ்விதப் பேதமை
வாழுமோ?—துயர்—சூழுமோ?
இற்றை நாட்டவர் ஆயினும் நீதிக்கண்
இல்லையோ?—மனம்—வல்லையோ?

## 20 என்ன வழக்கம்?

"கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்ற மெட்டு

மனிதர்தம்மை மனிதர்தின்னும் வழக்கமென்ன வழக்கம்?
மாண்பிழந்த வாழ்க்கைசெய்யும் மனிதனென்ன மனிதன்?
தனிமனிதன் வாழ்விற்காணும் செல்வமென்ன செல்வம்?
சார்ந்தோரேங்கத் தான்பார்த்துண்ணும் சாதமென்ன சாதம்?
கனிதலின்றி இதயங்கன்றக் கவரும்வாழ்வென் வாழ்வோ?
கையாலாகா மனிதரெய்துங் கண்யமென்ன கண்யம்?
இனிதைநீக்கி இடரைச்செய்யும் இயல்புவென்ன இயல்பு?
இன்பம்யாவும் தமதென்றெண்ணும் இதயமென்ன இதயம்?

தனிமனிதன் உரிமைக்கீனம் செய்தலென்ன செயலோ?
ஜாதிபேதத் தீமைகாட்டுந் தன்மையென்ன தன்மை?
புனிதம்எய்தத் தடைசெய்வோர்தம் புத்தியென்ன புத்தி?
புவியில்யாரும் வணங்காக்கோவில் புனிதமென்ன புனிதம்?
மனிதரண்மை மனிதர்செல்லல் மறுப்பதென்ன மறுப்போ?
மதியைத்தீட்டா மனிதர்செய்யும் வம்புஎன்ன வம்போ?
நனியசெய்கை நடையிற்காட்டா நல்லோரென்ன நல்லோர்?
நாட்டின்நன்மை கெடுதல்காணு நயனமென்ன நயனம்?

ஒருவன்நோக ஒருவன்பார்க்கும் உள்ளமென்ன உள்ளம்?
ஒருதாய்மக்க ளெனுமோருண்மை உணரா அறிவென்
அறிவோ?
தெருவழியே ஒருவன்செல்லத் தடைசெய்வதன் தடையோ?
தீமைசெய்வோர் யாரென்றுள்ளம் தெளியாதென்ன
தெளிவோ?
பருவம்வாய்ந்தார் உரிமைவேட்கை பறித்தலென்ன
பறிப்போ?
பலமிழந்தார் இதயம்நோகப் பண்ணுங்கட்டென் கட்டோ?
திருவின்சக்தி தீங்கிற்காட்டும் செல்வானென்ன செல்வான?
சிறப்பறிவை வகிப்போராயில் தீங்கைநீக்க விழைவீர்.

## 21 எத்தனை ஜாதியடா!

எத்தனை ஜாதிய டா!—தம்பி!
எத்தனை ஜாதிய டா!
அத்தனை ஜாதியும்
அத்தனை நீதி யும்
யாருக்கு வேண்டும டா!—தம்பி!
யாருக்கு வேண்டும டா!



2 உள்ளங்கு முறுக டா!—துயர்
உன்மத்த மாக்குத டா!
எள்ளள வேனுஞ் சு
தந்திர மில்லா மல்
எப்படி வாழ்வத டா!—இங்கே
எப்படி வாழ்வத டா!

3 வாழ்ந்தது போதும டா!—மன
வேதனை வேண்டாம டா!
தாழ்ந்தவ னாகப் பி
றந்திட்ட பாபத் தாற்
சாவது மேன்மைய டா!—மதிப்பொடு
சாவது மேன்மைய டா!

4 கத்தியுஞ் சொல்வலி யும்—அவர்
கையிலி ருக்குத டா!
சித்தம்போ லேதும் ம
றுத்துந டந்தி டிற்
சீற்றமுண் டாகும டா!—பெருஞ்
சீற்றமுண் டாகும டா!

5 கோவிலில் ஞாயமில் லை—குளங்
குட்டையில் ஞாயமில் லை
ஆவிப டைத்த வோர்
மானிட னென்ப தை
ஆளுவோர் காண்பதில் லை!—நம்மை
ஆளுவோர் காண்பதில் லை!

6 ஆண்டவன் விட்டுவிட் டான்—துன்ப
ஆழியிற் றள்ளிவிட் டான்
மாண்டபின் பேணும் நம்
ஆண்டவன் முன்னா லே
மீண்டும்உ ரைப்போம டா!—நீதிசெய்ய
மீண்டும் உரைப் போம டா!

7 நாயிலுங் கேவல மாய்—மறு
ஜென்மமெ டுத்திடி னும்
ஆயும்ப குத்தறி
வானரிற் பஞ்ச மன்
ஆவது குற்றம டா!—பஞ்சமன்
ஆவது குற்றம டா!

8 வம்புகள் செய்வதி லே—வரும்
வாழ்க்கையில் நன்மையில் லை
அன்பித யத்தி லே
ஆங்காரங் காண்பது
ஆகாத செய்கைய டா!—தம்பி
ஆகாத செய்கைய டா!

## 22 பாட்டாளி அனுபவம்

ஓடியோ டியுழைத் தேன்—சிறிதும்
உட்கார நேரமின் றி
தேடிக்கொ டுப்பதி லே—காலம்
சென்றதே மீதம டா!

2 வெய்யல்த ரும்நெருப் பில்—உடல்
வேகவி டுத்தேன டா!
கைமா று அற்றதி னால்—இப்போ
காந்தலெ டுக்குத டா!



3 கொட்டும்ம ழையினி லே!—வாடை
கொடுகுந் தன்மையி லே!
கட்டுத்த ளர்உட லை—விட்டுக்
கஷ்டம டைந்தேன டா!

4 அன்பற்ற சொல்லினி லே!—எந்தன்
ஆண்டேயின் ஏவலி லே
துன்பம்வெ டித்திடி னும்—பதிற்
சொல்லாமற் கேட்டேன டா!

5 நல்லநாள் இல்லைய டா!—ஓய்வு
நாட்கள்கி டையாத டா!
எல்லாமெம் பண்ணையர்க் கே—உழைத்(து)
இக்கெதி ஆனேன டா!

6 வாழ்க்கைந லன்அறி யேன்—மனை
மக்களைக் கண்டிடி னும்
தாழ்த்தப்பட் டேநலிந்தேன்—வாழ்க்கை
சத்தற்றுப் போனத டா!

7 ரோசம ழிந்தத டா!—புத்தி
நுட்பமும் செத்தத டா!
நீசப்பி றவியென் றே—தன்னை
நினைத்துக் கொண்டேன டா!

8 தோலும்எ லும்புட னே—இன்று
தோற்றம ளிக்குகின் றேன்
ஏலாத காலத்தி லே—வாழ்க்கை
எப்படிப் போகுமோ டா!

# 23 எம்மை மறுப்பதென்னே?

"ஆறுமுகவடி வேலவர்க்கு" என்ற மெட்டு

### கண்ணிகள்

எங்களு ழைப்பிலு யர்ந்தவோர் கோவிலி
லெம்மைம றுப்பதென் னே?—தெய்வம்
உங்களை மட்டும்ப டைத்தசா யெண்ணிவொ
துக்கநி னைத்தீ ரோ? (எங்க)

2 தெய்வம்பொ துவெனு முண்மையை இன்னும்நீர்
தெள்ளத்தெ ளியலை யோ?—நீங்கள்
செய்யுஞ்செ யல்ரொம்ப நல்லதா யேனையர்
சொல்வதா யெண்ணினீரோ? (எங்க)

3 பக்திப்பெ ருக்கிற்க சியுமோ ரின்பத்தைப்
பஞ்சம ருண்டுவிட் டால்—உங்கள்
சக்திபொய் யாய்விடும் என்னுமோர் பீதியை
சிந்தையிற் கொண்டீ ரோ? (எங்க)

4 ஆலயம் தங்களின் சொத்தென்று எம்மைநீர்
அண்டவி டமாட் டீர்—நாங்கள்
வேலைசெய் யாவிட்டால் ஆலயப் பூஜைகள்
வீழ்வத றியீ ரோ? (எங்க)

5 பஞ்சம ஜாதியைப் பார்த்துவிட் டாற்தெய்வம்
பாயுமோ கோவில்விட் டு?—கண்டு
அஞ்சும்ப டியென்ன நஞ்சுடை யோமதை
ஆகாதோ காட்டுதற் கு? (எங்க)



6 ஞாயமில் லாதவோர் மானிட ரென்பதை
நாட்டிலே காட்டுகின் றீர்—இந்தத்
தேயத்தில் யாமும்பிறந்தவ ரென்பதைச்
சிந்தனை செய்தில ரே! (எங்க)

7 எந்தவோர் நாட்டிலும் இந்தவ நீதிபோல்
என்றுமி ருந்ததில் லை!—இது
இந்தநாட்டைப்பி டித்தவோர் சாபமாய்
ஆனதே என்னதொல் லை! (எங்க)

8 ஜென்ம சாபல்யம டையவி ரும்பிய
தீனர்கள் தீயரா மோ?—ரொம்பச்
சின்னம தியுள்ளார் என்றுவொ துக்குதல்
சீரிய ரின்தொழி லோ? (எங்க)

---

# 24 ஒழிந்தது பழமை

கொட்டடா! கொட்டடா!
கொட்டடா!
குதித்தெழுந்த புதுமைஇன்பங்
குடிப்போமென்று (கொட்டடா!)

கொடுமையான ஜாதிபேதங்
குலைந்த தென்று கொட்டடா!
கொதித்தெ ழுந்த மிருகத் தன்மை
குறைந்த தென்று கொட்டடா!
அடிமை செய்யும் முறைமை யாவும்
அழிந்த தென்று கொட்டடா!
அறிவுப் பானு உதித்த தென்று
அகிலங் கேட்கக் கொட்டடா!— (கொ)

2 மனிதர் தம்மை மனிதர் தின்னும்
வழக்கம் யாவும் மாய்ந்த ன!
மாண்பி ழந்த சுயந லத்தார்
உறிஞ்சும் வாழ்வும் ஓய்ந்த ன'
இனியும் சென்ற நிலைவ ராத
இயற்கைச் சக்தி வளர்ந்த ன!
இன்பம் பொங்கும் அன்பு தங்கும்
என்று நாட்டிற் கொட்டடா!— (கொ)

3 கடன்ம றந்த மனிதர் யாரும்
கண்ண யர்ந்து போயினர்!
கடவுள் பேரைச் சொல்லி வாழ்ந்தோர்
கப்ப லேற லாயி னர்!
மடமை பொங்கும் கொள்கை யாவும்
மாண்ட ழிந்து போன தால்
மண்ட லத்தார் வாழ்வில் இன்பம்
மண்டு மென்று கொட்டடா!— (கொ)

4 ஆசை தீர்க்கும் மாந்த ரென்று
அடிமை கொண்டோர் போயினர்!
ஆண்களோடு சமமென் றெண்ணும்
அனபர் நாட்டில் வந்த னர்!
தேசம் செல்லும் வழிய டைத்தார்
செத்தொ ழிந்து போன தால்
தொழில்மி குந்த உலகச் செல்வம்
செழித்த தென்று கொட்டடா!— (கொ)



5 ஒருவன் வாழ்க்கை உயரு தற்காய்
ஊரி லுள்ள பேரெல் லாம்
உழைப்ப தாய பழைய வழக்கம்
உருவ ழிந்து போயி ன!
திருவை யாரும் பகிர்ந்துண் கின்ற
திட்டம் நாட்டில் வந்த தால்
சிறிதுங் கவலை இல்லை என்று
தெளித்துச் சொல்லிக் கொட்டடா!— (கொ)

6 பழமை பேசிப் பொழுதைக் கொல்லும்
பண்பி னோர்கள் ஓய்ந்த னர்!
பட்டிக் காட்டான் பட்டி னத்தான்
பேதம் அற்றுப் போயினர்!
வழமை யென்று வாதம் இட்டோர்
வாயடைத்துப் போன தால்
மனித வாழ்க்கை உயர்நி லைக்கு
வருகு தென்று கொட்டடா! — (கொ)

---

## 25 வெளிநாட்டுப் பஞ்சமர்

நாட்டைம றந்துவிட் டோம்!—ஏனையவர்
நட்பினைப் பெற்றுவிட் டோம்!
தீட்டென்றொ துக்கிவைக் கும்—கொடுமையிற்
சிக்காது தப்பிக்கொண் டோம்!

2 பற்பல ஊர்களி லே—இருந்திங்கே
பாட்டாளி யாகவந் தோர்
அற்பம னம்படைத் தார்—இல்லையென
ஆங்காங்கு நாட்டிக்கொண் டார்.

3 தள்ளென்று சொல்லமாட் டார்! ஜாதிப்பெயர்
சொல்லிய ழைக்கமாட் டார்!
உள்ளபெ யரைச் சொல் லி!—மரியாதை
ஒட்டியே கூப்பிடு வார்!

4 தமிழர் இந்தியர் கள்—என்பதல்லால்
ஜாதிபேர் சொல்வதில் லை!
குமிழி வாழ்வதி னால்—வேற்றுமைக்குக்
கொஞ்சமும் வேலைஇல் லை!

5 பஞ்சம ரென்றுசொன் னால்—பிறநாட்டார்
பேந்தப்பேந் தவிழிப் பார்!
கொஞ்சம்வி ளக்கிடி லோ!—அதிசயம்
கொண்டும லைத்துநிற் பார்!

6 பெற்றபொன் நாட்டினைப் போய்—ஒருமுறை
பார்க்கநி னைத்திடு வோம்
சற்றும்இ ரக்கமற் ற—ஜாதிக்கட்டாற்
சஞ்சலங் கொண்டிடு வோம்!

7 ஓர்விலை; ஓர்நிலை யிற்—பழகினோர்
ஊருக்கு வந்துவிட் டால்
யார்இடம் கைகட்டு வோம்?—தீண்டாதோராய்
எப்படி வாழ்ந்திடு வோம்?

8 ஜாதித்தி மிர்பிடித் தோர்—எங்களுக்குத்
தன்மதிப் பீவா ரோ?
நீதிதெ ரியா தோர்—மத்தியிலே
நிம்மதி காண்போ மோ?



# 26 வெட்கமுண்டாகுதடா!

வெட்கமுண் டாகுத டா!—தம்பி!
வெட்கமுண் டாகு தடா!—பெரும் (வெ)

மக்கட்பி றப்பினி லே—பலவித
மாறுதல் காட்டலி னை
பக்கத்து நாட்டவர் பார்த்துச்சி ரிக்கவும்
ஒக்கப்பி றந்தவன் உள்ளங்கு முறவும்
தக்கவர் யாங்களெ ன—பிறரிடம்
சண்டைபி டிப்பதற் கு—பெரும் (வெ)

2 ஜாதியைக் காட்டுகின் றார்—அதிலெழும்
சண்டையைக் காட்டுகின் றார்
நீதிய றியாதார் நீசத்த னங்களை
காதிலே ஈயத்தைக் காய்ச்சிவ டித்தல்போல்
ஓதிவ ருத்துகின் றார்—நடைபெறும்
உண்மையைக் காட்டுகின் றார்—அது (வெ)

3 கோவிலைக் காட்டுகின் றார்—அடுத்தவோர்
குளத்தைக் காட்டுகின் றார்
பாபவி மோசனம் பாலிக்க வேண்டுவோர்
ஆவலுக் கூனஞ்செய் அவர்தம் செய்கையை
நாவினாற் சுட்டுகின் றார்—ஒரு
நையாண்டி செய்கின் றார்—நெஞ்சில் (வெ)

4 கைம்மையைக் காட்டுகின் றார்—அவர்படும்
கஷ்டத்தைக் காட்டுகின் றார்
வையம்வி ரிந்துவ ளர்ந்தஇக் காலத்தில்
நையப்பு டைக்குமோ நாசச்செ யலினை
கையிலே காட்டுகின் றார்—நெல்லியைப்போல்
கையிலே காட்டுகின் றார்—ரொம்ப (வெ)

# 27 கொட்டு முரசே!

வெற்றிவெற்றி வெற்றியென்று கொட்டுமுரசே!
வேற்றுமையொ ழிந்ததென்று கொட்டுமுரசே!

கற்றுணர்ந்த மானிடர்க்கு ஜாதிகளில் லை!—உண்மை
கண்டுணர்ந்த ஞானிகட்கு வேதங்களில் லை!
பெற்றெடுத்த தாயிடத்திற் பேதமேயில் லை!—மக்கட்
பெருமையு ணர்ந்தோரிடம் வாதமேயில் லை!—உண்மை(வெ)

அன்பிதயம பூப்பதெனின் அன்புமல ரே—இன்றி
ஆத்திரங்கி ளப்புப்வை ஆங்குபொடி யா
இன்பநிலை எய்தமனம் இச்சையுறு வோர்—அன்பின்
இயல்பிற்சு ழல்வாரென்றே கொட்டுமுரசே!— (வெ)

வற்புறுத்திக் காதல்செய்ய வாட்டுவோரில் லை!—சதா
வம்பியற்றுந் துட்டர்கட்கு வாழ்க்கையேஇல் லை!
அற்பமனம் செத்தொழிய அன்புமய மாய்—மாறும்
ஆச்சரியம் பூத்ததென்றே கொட்டுமுரசே!— (வெ)

ஜாதிமதம் பேசிப்பேசிச் சண்டையிடு வோர்!—செய்யும்
சர்ச்சையிலே கோபங்கொள்ளுந் தன்மையுடை யோர்
நீதியிலே பந்தங்காட்டி ஞாயம்வழு வும்—பலர்
நெஞ்சழிந்து போனாரென்றே கொட்டுமுரசே!— (வெ)

கண்ணிலொன்றைக் குத்திக்கொள்ளும் பேதமைக்
கொள்கை—நாட்டுக்
கண்ணியரைத் தாழ்த்திப்பேசும் தீயரின்செய் கை
உண்மைநிலை இன்னதென்று உள்ளந்தெளிந் தார்—ஞாயம்
உதித்தது என்றதிரக் கொட்டுமுரசே!— (வெ)



சொத்துடையான் என்றதனிச் சிறப்புவெல் லாம்—ஒரு
செல்லரித்த சிறப்பெனத் தேசம்வழங் கும்
சத்தியத்தின் நித்தியத்தை நம்புவோரெல் லாம்—ரொம்பச்
சந்தோசங் கொள்வாரென்றே கொட்டுமுரசே (வெ)

---

# 28 தேடி வைத்தவனும் சிலவுசெய்தவனும்

## மீதம்வைத்தவன்:

பாடுபட் டுப்பொருள் தேடிப்ப யன்னென்ன?
பாதுகாத் தாயில்லை யே!—என்ன
கேடுகெட் டாலும்பொ ருள்மீதம் வைத்தவன்
கீர்த்திஉ னக்கில்லை யே!— (பா)

2 சின்னயெ றும்புகள் சேமிக்குந் தன்மையைச்
சிந்தனை செய்தா யோ?—உந்தன்
உன்னத சேமிப்பு வீணாகுந் தன்மையில்
ஊருக்கி றைத்தா யே!— (பா)

3 நாளைவேண் டுமென்ற நாட்டமில் லாதவர்
நாடும்பொ ருள்யா தோ?—கஷ்ட
வேளைவந் தபோது வேற்றாரைக் கெஞ்சிட
வேண்டுமென் றநினைப் போ?— (பா)

4 சந்ததி யார்கள்பின் ஜீவியத் திற்கேதுஞ்
சேமித்தல் வேண்டா மோ?—வீணில்
இந்தம திஉனக் கெய்ததாற் சந்ததி
ஏழையர் ஆகா ரோ?— (பா)

5 உண்ணல்உ டுத்தல்உ றங்கலே வாழ்க்கையாய்
உள்ளத்திற் கொண்டா யோ?—கொஞ்சம்
எண்ணமிட் டால்இவை இல்லையென் னும்உண்மை
எய்திட மாட்டா யோ?— (பா)

6 சேமிப்புச் செய்யாதார் செய்யும்வீண் டம்பங்கள்
சாகும்வ ரைநிலைக் கா!—இந்தப்
பூமியி லேயவர் வாழ்க்கைப யங்கரப்
பேய்க்கிலக் காய்விடுங் காண்!— (பா)

### சிலவுசெய்தவன்:

7 பாடுபட் டுப்பொருள் தேடிக்கு வித்தநீர்
பெற்றப யனென்ன வோ?—உம்மால்
நாடுபெற் றபயன் ஈதென்று சொல்லுமோர்
நன்மையைச் செய்தீ ரோ?— (பா)

8 தேடிக்கு விப்பதும் தின்னுமற் சாவதும்
சீரிய வாழ்க்கைய வோ?—தம்மை
நாடியோர் கட்கேதும் நன்மைசெய் யாதவர்
நாட்டிலி ருப்பவ ரோ?— (பா)

9 வாழ்க்கைந டத்தப்பொ ருள்தேடாச் சந்ததி
வையத்தில் வாழணு மோ?—அவர்
வாழ்க்கைக்கென் றேபிறர் வாழ்வைகொன்றே பொருள்
வஞ்சித்து வைக்கணு மோ?— (பா)

10 இல்லற மென்பதை இன்னம்தன் றுயாமல்
யாரையும் வஞ்சஞ்செய் தீர்!—அதில்
எல்லைஇல் லாப்பொருள் ஈட்டிக்கு வித்தாலும்
இன்பத்தைக் கண்டீ ரோ?— (பா)



11 காட்டும ரமும்பி றர்க்குப காரமாய்க்
காய்கனி ஈந்திலை யோ?—இந்த
நாட்டும னிதராய் நீர்பிறந் துமென்ன
நன்மையைச் செய்யுகின் றீர்?— (பா)

12 சாகும்வ ரைபொருள் தேடுவ தல்லாமற்
தின்னவும் மாட்டீ ரே!—செத்துப்
போகும்போ துகொண்டு போவோமென்
னும்எண்ணம்
புந்தியிற் கொண்டீ ரோ?— (பா)

---

## 29 வாத்தைத் திருடிய நரி

வாத்தைத் திருடிய நரியொன்று
வலையில் அகப்பட்டுக் கொண்டது வே
வாத்தை யுடையோன்; வலைவிரித் தோன்
மகிழுடன் நரியைப் பிடித்துக்கொண் டான்

2 "திருட்டு நரியே உன்இனத் தார்
திருட்டுத் தொழிலை மறந்துவி ட
சுருக்கில் இட்டுனைத் தூக்கிடு வேன்
தொங்குக" என்றான் குடியா ளேன்

3 "இனத்தா ரெல்லாம் எனைப்பார்ப் பார்
எஞ்சிய வாத்தையும் விருந்துண் பார்
உனக்கே இதிலும் பெரும்நஷ் டம்
வேண்டாம்" என்றது குள்ளந ரி!

4 "இனத்தைத் திருத்தும் முறைக்கா க
இல்லை உனைநான் தூக்கிடு தல்
உனக்காய் உன்னைத் தூக்கிடு வேன்
ஒழிவாய் திருடா!" எனச்சொன் னான்

5 "என்னைப் படைத்தது எப்படி யோ
யானும் அதன்படி நடக்கின் றேன்
என்னை நானா படைத்துக்கொண் டேன்?
யார்மேற் குற்றம்?" என்றது வே!

6 "உயிராய் வளர்த்த வாத்துக ளை!
ஒவ்வொன் றாகத் திருடிவிட் டாய்
பயிர்கள் வளரக் கிடைபோ டும்
பயனைக் குறைத்தது ஏன்?" என் றான்

7 "இயற்கை காட்டிய வழியிது வே
எதைநான் உண்டு உயிர்வாழ் வேன்?
செயற்கை உணவுந் தெரியா தே!
தெரிந்தால் உண்ணா திருப்பேனா!

8 எல்லா வாத்தையும் நீ கொண்டு
என்னைத் திருடன் என்கின் றாய்!
நல்ல முறையிற் பங்கிட் டால்
நாளுந் திருடேன்" என்றது வே

9 "வாதம் எனக்கு விளங்கவில் லை'
வாத்தைத் திருடிய தேஅறி வேன்
ஆதலாற் தூக்குத் தண்டனை யே
அளிப்பேன்" என்றான் குடியா னோன்



10 "உலகில் எல்லாப் பொருள்களி லும்
உயிரே சிறந்த பொருளா கும்
பலநாள் வாழும் ஒருஉயி ரைப்
பறிப்பது நல்லார் செயலா மோ?

11 என்மேற் குற்றஞ் சாட்டுகி றீர்
யானோ அதனை மறுக்கின் றேன்
இன்னொரு மனிதனும் இங்கில் லை
இருவர் சொல்வதில் எது மெய்யோ!

12 குற்றம் இல்லான் நானா னாற்
கொல்வது உமக்குப் பெரும்பா பம்
குற்றம் உடையோன் என்றா லும்
குறையைத் தெரிய நான்வேண் டும்

13 கல்லாப் பிழையும் பெரியோ ரைக்
காணாப் பிழையும் ஒன்றா கி
பொல்லாப் பிழையை இழைத்தா லும்
பெரியோர் திருத்தணும்" என்றது வே

14 "இதயம் பதிய அறம்பே சும்
இயல்பிற் சிறந்த நரியா ரே
எதைத்தான் செய்யச் சொல்லுகி றீர்?"
என்றான் அந்தக் குடியா னோன்

15 "வலையை அவிழ்த்து விடவேண் டும்
வயிற்றிற் கேதுந் தரல்வேண் டும்
பலநாள் எனக்கு ஒழுங்கா க
படிப்புங் கொடுத்தாற் திருந்திடு வேன்

16 திருட்டையுங் கொலையையும் நிறுத்திடு வேன்
தீமையி லிருந்து தப்பிடு வேன்
உருட்டையும் புரட்டையு மொழித்திடு வேன்
ஒழுங்காய் வாழ்க்கை நடத்திடு வேன்

17 நரியாய்ப் பிறந்தவன் நாயா க
நானே மாறினும் மாறிடு வேன்
பெரியோர் இதற்கு வசதிசெய் தாற்
பெருமை'' என்றது குள்ளந ரி

18 "சரிதான், சரிதான் நரியா ரே
சாஸ்திர மெல்லாஞ் செல்லா து
வருஷா வருஷம் உமக்கா க
வாத்துங் கொடுக்க முடியா து

19 நாய்கள் நிறைய எமக்குண் டு
நீயும் நாய்கள் உடன்சேர்ந் தால்
பேயாய் மாற்றம் அடைவீர் கள்
பெரிதும் இடஞ்சல் செய்வீர் கள்

20 ஏதோ கையில் அகப்பட் டாய்
இனிமேல் விடுவது சரியல் ல
போதாக் காலம் தமக்கென் று
புரிவீர்'' என்றான் குடியா னோன்

21 "வாளும் வலியும் படைத்ததி னால்
மற்றோர் உயிரைப் போக்குவ து
ஆளுங் கடவுள் நீதிக் கே
அடுக்காச் செய்கை விட்டுவி டும்

45715



22 வயிற்றின் பசியால் உயிர்கொன் றேன்
பாவச் சுமையும் சுமந்துகொண் டேன்
பயிற்றும் முறையில் எனக்கென் றால்
பாவம் உமையும் சூழா தோ?

23 எல்லாம் கடவுள் படைப்பன் றோ?
ஏனோ நமக்குள் வீண்பகை மை?
பொல்லா தவர்க்கு நரகமன் றோ?
போய்வர விடைகொடும்'' என்றது வே

24 "உன்மேற் கோபம் சிறிதுமில் லை
உயிர்வதை செய்யவும் நினைவில் லை
என்னமோ உன்னோடு வாழ்வதற் கு
இடமில்லை அதனாற் தூக்கிடு வேன்

25 எனக்கும் உன்மேல் அனுதா பம்
இருப்பதில் ஐயம் சிறிதுமில் லை
தனக்கே வினையாம் முளைத்தது வை
தகர்ப்பது எந்தன் கடமையன் றோ?

26 கத்தரித் தோட்டத்திற் களைமுளைத் தால்
கிள்ளி எறிவதை விட்டுவிட் டு
கத்தரிச் செடியாய் மாறும்ப டி
களைகளைக் கேட்கும் வழக்கமில் லை

27 களையைப் பிடுங்குதல் அதன்மீ து
கோபம் உண்டெனும் பொருளல் ல
விளையுங் கத்தரி நலனுக் காய்
வேரொடு கிள்ளல் முக்கிய மே

28 மறுத்துப் பேசலிற் பயனில் லை
வாழ்க்கையிற் கடைநாள் இன்றே தான்
வருத்தமாய் இருக்குது நரியா ரே
மரத்திற் தூங்கிடத் தான்வேண் டும்''

---

## 30 கூலிப்பக்தி

ஆடும் மாடும் பிறஉயி ரும்
அல்லும் பகலும் மனிதற் காய்
நாடுந் தொழில்கள் செய்துத வும்
நயத்தைச் சுவைப்பார்; மகிழ்வெய் வார்
ஈடும் நன்றியும் வெகுசொற் பம்
இயற்கையின் நியதி யெனச்சொல் வார்
நீடுங் காலம் தொழில் ஏவி
நிலைமையை வென்றார் மானிட ரே!

2 பிறரை ஏவி உயிர்வாழ் வார்
பிறருக் கேவல் தாம்செய் வார்
திறமைக் கேற்பச் செய்கூ லி
தொழிலாளர்க் கீவார்; தாம்பெறு வார்
அறமும் வாழ்வும் இதிற்காண் பார்
அன்பைப் பரிவர்த் தனைசெய் வார்
முறையோ டொருவர்க் கொருவர்செ யல்
மேன்மை தருவன ஆயின வே!



3 மனிதன் மனிதனைத் தொழில் ஏவி
வாழ்க்கை நடத்திய வழக்கத் தால்
புனிதம் அறியாச் சிறுசெய லிற்
புத்தியும் காலமும் வீணாக் கி
''எனதின் நோயை நீதீர்த் தால்
இடுவேன் பூஜை'' என்றுசொல் லி
மனிதனை மனிதன் ஏவுதல் போல்
வானோர் தம்மையும் ஏவுகின் றார்!

4 கோவிலுங் குளமுங் கட்டிடு வார்!
குருக்களை ஆங்கே நியமிப் பார்!
ஏவலும் சுவாமிக் கிட்டிடு வார்!
''எங்குறை தீராய்'' எனச்சொல் வார்!
கூலிய முறையைக் கேட்பது வாய்
கொள்வார் மயங்கும் இதயத்தி லே
ஆவியின் லயம்நன் கறியா தார்
அன்றோ இந்தச் செயலா ளர்?

5 உணவும் பிறவும் மனிதர்க ளால்
உம்பர்க் கீவது மெய்யா யின்
பணமும் சுகமும் பதிலா கப்
படைத்தவர் அருள்வது மெய்யா யின்
இணங்கும் வர்த்தக எனக்காட் டி
ஏளனம் செய்யும் முறையன் றோ?
குணமும் பக்தியும் ஒன்றெய் து
குதிக்கும் அடியார் செயலிவை யோ?

6 பக்திப் பெருக்கைக் காட்டிடு வார்
பாபம் விலக இறைஞ்சிடு வார்
முத்தி யளிக்க வேண்டிடு வார்
முகஸ்த் துதிசெய்து கூப்பிடு வார்
இத்தனை செயலும் நரகப யம்
இலனுய்த் தப்பும் முறைமையொன் றை
உத்தே சித்தே ஆகையி னுல்
உள்ளத் தூய்மை கிடையா வே!

7 வரும்பயன் கருதாப் பணிசெய் வார்
வளம்படு மோக்ஷ நினைவில் லார்
திருமகள் மடியில் விளையா டும்
சிந்தனை இல்லார் செய்பக் தி
பெரும்பயன் உளதாய்; உயர்ந்த துவாய்
பிழையெனும் மாசு படியா த
தருமமும் பிறவும் இதுவொன் றே
சான்றோர் கண்ட முடிவே யாம்

8 நரகின் பயத்தாற் கைக்கூ லி
நரர்கள் தேவர்க் கீவது வும்
தரகை ஈந்து பொன்னுட் டைக்
சார்வோம் என்று நினைப்பது வும்
சிரமம் இன்றி குறுக்குவ ழி
செல்வோ மென்று முயல்வது வும்
விரியும் மனத்தார் செயலென் றே
விள்வா ருண்டோ ஜகத்தீ ரே?



# 31 இளைஞன் என்று சொல்லடா!

இளைஞன் என்று சொல்லடா!
இகட்சி யாவும் நீக்கடா (இளை)

இளமை ரெத்தம் உடலிலோட
ஏறும்நாண நடப்ப வன்
இதயங் குன்னும் முறையில் வாழ்வை
இணைத்துக் கொண்டு வாழ்வ தோ?
இளைஞர் கையில் யாவும் என்று
எங்குங் கேட்கும் பேரொ லி
இரண்டு காது இருந்தும் செவிடு
என்று சுட்ட வேண்டு மோ?— (இளை)

2 தொழிலில் லோகந் தொங்கு தென்று
சொல்லும் வாதம் உண்மை தான்
தொழிலைப் பழித்து இழிவைப் புகுத்தி
தொலையில் நிற்கச் சொல்லி டில்
தொழிலை நிறுத்து அன்றேல் அந்தத்
துட்டர் கருத்தை வெட்டி டு
இழிவு யென்று தெரிந்தும் ஏதும்
இயற்ற லின்றி வாழ்ந்தி டேல்— (இளை)

3 வயிற்றுப் பிழைப்பு யென்று சொல்லி
மான மழிந்து கிடப்ப தோ?
வருமைப் பிணியை நீக்கத் தமது
மனைவி கற்பை விற்ப தோ?
வயிற்றை யெண்ணி அலைந்து திரியும்
விலங்கின் வாழ்க்கை போலவே
வாழும் வாழ்வை யொழித்துக் கட்டி
மானம் பேண எழுந்திரு— (இளை)

## 32 வானத்து முல்லை

மகள்:

வானத்து முல்லைம லர்ந்ததம் மா—ஒளி
வையத்தி லேவந்து சிந்துதம் மா!
மோனத்தி தயத்தைத் தாக்குதம் மா—வெறி
மெய்மறந் தாடிடச் செய்யுதம் மா!

2 பூவுல கத்தைப்ப ழிப்பதற் கே—வானிற்
பூத்தது வாய்நெஞ்சிற் றேறுதம் மா!
தாவிப்ப றிக்கக்கு திப்பதி னால்—ஏதுஞ்
சங்கடம் நேறுமோ சொல்லுசும் மா!

3 வாணிக்குச் சூட்டிம கிழ்வதற் கே—நீல
வானத்திற் பூத்ததாய்க் காணுதம் மா!
ஆணிப்பொன் மேனியாள் கொண்டையி லே—சூட்டி
அழகு பார்த்திட வேண்டுமம் மா!

4 வெள்ளிம லையொன்று போகுதம் மா!—போகும்
வீதியெல் லாம்வெள்ளி சிந்துதம் மா!
அள்ளிக்கொள் ளமனம் தூண்டுதம் மா!—இந்த
ஆசைக்குப் பூரண ஆயுசம் மா!

5 நீலநி றப்பந்தல் காணுதம் [illegible]!—பூக்கள்
நின்றுநின் றுகண்சி மிட்டுதம் மா!
"சோலைக்குள் வா"வென்ற ழைக்கு[illegible] மா!—அதைச்
சுற்றிப்பார்த் தால்ரொம்ப நல்லதம் மா!



6 இந்திரன் லோகத்துப் பெண்கள்கண் டால்—மலர்
எப்படி யுங்கொய்து போய்விடு வார்
அந்தநி லைமைக்குப் போகுமுன் னே—சென்று
அபக ரித்திட வேண்டுமம் மா!

7 அந்தரத் தில்வந்து பூத்ததி னால்—எந்தன்
ஆசைக்குப் பங்கம்வி ளைந்திடு மோ!
எந்தவி தத்திலும் கொய்துகொள் ள—யுக்தி
ஏதேனு முண்டுமோ சொல்லுஅம் மா!

8 எத்தனை நாளைக்குப் பூத்திருக் கும்!—அது
எப்படி யும்விழ வேண்டுமம் மா!
அத்தனை யும்வொரு மாலைகட் டி—விளை
யாடிக்க ளித்திட வேண்டுமம் மா!

---

## 33 மாலைப் பொழுது

மகள்:

மாமாலைப்பொ ழுதின்இ னிமையி லே—புது
மாட்சிமை பூத்துக்கு லுங்குதம் மா!
நீலத்தி ரைக்குள்ளே போகுமுன் னே—அதன
நிர்மல ஜோதியைக் காட்டுதம் மா!

2 தங்கநி றத்தைப்ப [illegible]புதம் மா!—தன்னைச்
சார்ந்தோரைத் தங்கமாய்ச் செய்யுதம் மா!
எங்களுக் கு[illegible]தச் சக்திவேண் டும்—என்று
ஈசனை மன்றாடிக் கேட்போ மம்மா!

3 புள்ளிக்க பாலமொன் றாடுதம் மா!—சிறு
பூக்களும் மேற்றிசை நோக்குதம் மா!
துள்ளித்தி ரிகின்ற மானின் மும்—மாலை
ஜோதியி லேசொக்கி நிற்குதம் மா!

4 நாகண வாய்கிளி பட்சியெல் லாம்—தங்கள்
நட்பினைக் காட்டுது தீங்குர லால்!
ஏகமாய் யாரையுஞ் சொக்கவைக் கும்—சக்தி
எப்படிப் பெற்றதோ சொல்லுஅம் மா!

5 காலையிற் காட்டிய பொன்னிறத் தை—மீண்டும்
காட்டுறார் பாரம்மா! போகும்போ து!
மேலே எழுந்தபின் கொட்டும்வெ யில்—இந்த
வேளையில எங்கேப துங்கிய தோ?

6 தங்கம லைபல தோன்றுதம் மா!—அதில்
தாவிவி ளையாடத் தூண்டுதம் மா!
மங்கள ஜோதியைக் காட்டுதம் மா—இந்த
மாலைப்பொ ழுதினை வாழ்த்து அம்மா!

## 34 கோபிக்க வேண்டுமம்மா!

மகள்:

அப்பாவுக் கெப்போது[illegible] கோபமம் மா!—கோபம்
ஆகாது யென்றாலுங் கேளாரம் மா!
எப்போது மிப்படிச் சண்டை[illegible] டால்—இங்கே
எத்தனை நாளைக்கு வாழ்வதம் மா!



2 பச்சைச்சி ரிப்பைச்சி ரிக்கையி லே—அவர்
பாதத்தைக் கும்பிடத் தோணுதம் மா!
கொச்சைத்த மிழிலே ஏசும்போ து—நெஞ்சிற்
குத்திக்கி ளப்புது வேதனை யை

3 வாடியென் றென்னைம டியிருத் தி—நல்ல
வார்த்தைகள் சொல்லிச்சி ரிக்கவைப் பார்
"போடிவொங் கம்மாவைக் கேட்டுவாடி"—என்று
போகவி டுத்தென்னைப் பார்த்திருப் பார்!

4 சின்னஞ்சி றுபிள்ளை யாடுதல் போல்—ரொம்பச்
சந்தோச மாய்விளை யாடிடு வார்
என்னிடம் இப்படிச் செய்துவிட் டு—கோபம்
ஏற்றுக்கு உன்னிடம் காட்டுகி றாய்?

5 கோபித்து உன்னிடம் பேசக்கண் டால்—எந்தன்
கும்மாளம் எங்கேயோ வோடிவி டும்!
ஆபத்து வந்ததாய்ப் பீதிகொள் வேன்—கோபம்
ஆறுமட் டும்முகம் பார்க்கமாட் டேன்!

6 மீசைப டபட யென்குதம் மா!—அவர்
வார்த்தையில் ஆங்காரம் பொங்குதம் மா!
ஆசைசெ லுத்திடும் மாந்தரி டம்—இந்த
ஆபாசச் செய்கையும் உண்டோவம் மா?

7 பந்தத்தைப் போலே[illegible]ய ரியுதம் மா!—கண்ணைப்
பார்க்கவும் உள்ளம்ந டுங்குதம் மா!
சிந்தைந டுக்[illegible]ங் கண்களி னை—தேவன்
செய்தது கோபத்தைக் காட்டுதற் கோ?

8 எப்படி யெல்லாமோ ஏசுகி றார்—நீ
ஏனென்றுங் கேளாமல் நின்றிருப் பாய்
இப்படிப் பட்டவோர் பெண்ணினை யும்—அவர்
ஏற்றுக்க டித்தனர் சொல்லுவம் மா?

9 அப்பாவைக் கோபிக்க வேண்டுமம் மா!—கொஞ்சம்
ஆத்திரங் காட்டவும் வேண்டுமம் மா!
இப்படி யேநாளும் விட்டுவிட் டால்—பின்னால்
எப்படி யெல்லாமோ ஆய்விடு வார்

10 பேசாமல் நின்றாலும் கோபம்வ ரும்!—ஏதும்
பேச்சுக்கொ டுத்தாலுங் கோபம்வ ரும்!
கூசாமல் ஏதேனுஞ் சொல்லிச்சொல்லி—அவர்
கோபத்தை மாற்றிட வேண்டுமம் மா

---

# 35 ஈட்டற்ற பொக்கிஷம்

தாய்:

அப்பாவிற் கோபம்நீ கொள்ளதே—அவர்
அன்பிற்குப் பங்கத்தைச் செய்யா தே
எப்போதும் அப்பாவின் செய்கையி தே—நம்மால்
இன்றைக்கு மாற்றிடக் கூடுமோ டி?

2 கோபம்போல் லாதவை ஆனா லும்—கோபம்
கொள்ளாவிட் டால்அன்பில் இன்பமில் லை
தாபமும் வாழ்க்கையில் வேண்டும டி—அதைத்
தள்ளிவைத் தால்ருசி இல்லைய டி!



3 காதலன் காதலி சண்டையி லே—பகை
காணப்ப டுவது இல்லைய டி
ஈதொரு வேடிக்கைச் சண்டைய டி—கோபம்
என்றும்நி லைப்பவை யல்லவ டி

4 பேச்சுக்குப் பேச்சுயெ திர்த்துநின் றால்—அது
பெண்மைக்கு ணத்திற்குப் பங்கம டி
ஏச்சுகள் கேட்டாலும் தோசமில் லை—பிறர்
ஏழனஞ் செய்திடக் கூடாத டி!

5 கொண்டவன் ஏச்சினைக் கேட்பதி னால்—பிறர்
குத்திக்கி ளப்புதற் கொன்றுமில் லை
சண்டித்த னம்பேசும் பெண்களென் றால்—பெண்கள்
சாடைக்கி லக்காக வேண்டும டி!

6 தீயினைத் தீகொண்டு கொல்வதுண் டோ?—அந்தத்
தீயின்கு ணங்குளிர் ஆவதுண் டோ?
ஆயும்ப குத்தறி வுள்ளவர் கள்—இதை
ஆராய்ந்து பார்த்திட வேண்டும டி!

7 தண்ணீரை யூற்றிய ணைத்திட லாம்—தீயின்
சீற்றங்கள் யாவையும் போக்கிட லாம்
திண்ணமு டையவன் சாந்தநெஞ் சில்—கோபத்
தீயின்சு வாலைபோய்த் தாக்காத டி!

8 பட்டப்ப கலெல்லாம் சுட்டெரிக் கும்—வெய்யல்
பட்டுத்தி ரிந்தவர் வீடுவந் தால்
இட்டப ணி[illegible]லை குற்றங்கண் டால்—கோபம்
ஏறிவி டுவதி யற்கைய டி

9 கூடிந டத்துமில் வாழ்க்கையி லே—ஒரு
குற்றத்தைக் கண்டுதி ருத்துவ தால்
மோடிகள் செய்திட ஞாயமுண் டோ?—இவை
மாதர்கள் செய்யுங்க டமைய வோ?

10 அப்பாவின் உள்ளத்தை நானறிவே ன்—அவர்
அன்பிலே மூழ்கித்தி ளைத்தவள் நான்
எப்போதும் கோபமாய்ப் பேசிடி னும்—நமக்
கீடற்ற பொக்கிஷ மாகும டி!

---

# 36 இந்தக் கோபம் ஆகுமா?

மகள்:

எப்போதும் அம்மாவை ஏசுகிறாய்—அவள்
என்னதான் அப்படிச் செய்துவிட் டாள்?
இப்படி யேநானுஞ் செய்துவந் தால்—நான்
ஏறிட்டுப் பார்க்கவும் மாட்டேன்அப் பா!

2 அம்மாவை ஏசிநீ போய்விடு வாய்—அவள்
ஆறுபோற் கண்ணீரைக் கொட்டிடு வாள்
சும்மாநான் எப்படிப் பார்த்திருப் பேன்?—நானும்
சேர்ந்துஅ ழுதிடத் தோன்றும்அப் பா!

3 சண்டையில் லாமலே வாழ கைசெய் ய—தாத்தா
சொல்லிக்கொ டாமலே போயின ரோ?
அண்டைஅ யலவர் கேட்கும்ப —ரொம்ப
ஆபாச வார்த்தைகள் பேசலா மோ?



4 கள்ளைக்கு டிப்பது பாபமென் பாய்—வெறி
கள்ளைவி டக்கோபங் கொண்டுநிற் பாய்!
கள்ளிலுங் கோபம்வெ றியிலதாய்—எவர்
கற்றுக்கொ டுத்தனர் சொல்லுஅப் பா?

5 கள்ளைகு டிப்பவன் கண்ணிலே யும்—கோபம்
கொண்டுமு றைப்பவன் கண்ணிலே யும்
துள்ளிவ ருஞ்சுடு காட்டுத்தீ யை—வாயாற்
சொல்லவும் நெஞ்சம்ப தறுதப் பா!

6 அம்மாவுக் கென்னிடம் அன்புவுண் டு—நீயும்
அப்படி யேயென்னிற் காட்டுகி றாய்
சும்மாஇ ருவரும் சண்டையிட் டால்—நான்
சேர்வது யாரிடஞ் சொல்லுஅப் பா?

7 தீப்பொறி கக்கநீ பார்க்கையி லே—முகம்
சிங்கத்தைப் போலவே தோணுதப் பா!
பார்ப்பவர் யாருமே அஞ்சிடு வார்—எனில்
பக்கத்தில் எப்படி நான்வரு வேன்?

8 அன்பொடு பேசுதல் கண்டுவிட் டால்—ஒரு
ஆனந்தம் என்னிலே பொங்குமப் பா!
இன்பஞ்சு வைப்பதை விட்டுவிட் டு—கோபம்
ஏற்றுக்குக் கொள்கிறாய் சொல்லுஅப் பா!

9 அம்மாவுக் குன்னி ம் அன்புவுண் டு—நீயும்
அப்படி யேயென்று சொல்லுகி றாய்
சும்மாஏன் ச டைகள் போடுகி றீர்?—என்னைச்
சோதித்து பார்க்கவோ சொல்லுஅப் பா?

10 வீட்டிலே சந்தோசம் தங்குதற் கு—நான்
வேண்டும்மு யற்சிகள் செய்திடு வேன்
காட்டில்அ லைந்துநீ வந்தவு டன்—இந்தக்
காக்ஷியிற் சொக்கலாம் என்னு ளும்.

---

## 37 காலைதெரிந்தது எப்படி?

மகள்:

வெள்ளிக்கெ டியாரம் இல்லா மல்—காலை
வேளைதெ ரிந்தது எப்படி யோ?
அள்ளு உணர்ச்சியைப் பெற்றவை போல்—நாம்
யாரும்எ ழும்புமுன் கூவிய தே!

2 கூரைமேல் ஏறிய சேவலொன் று—றெக்கை
கொட்டியும் கூவியும் நிற்குதம் மா!
யாரையும் எத்தையும் கேட்கா மல்—தினம்
இப்படி யேகூவு கின்றதம் மா!

3 புள்ளினம் யாவும்வி ழித்ததம் மா!—காலைப்
போதென்று சொல்லிஇ ரையுதம் மா!
வெள்ளிப்ப ணம்இவைக் கார்கொடுப் பார்—காலை
வேளைய றிவிக்கும் கூலிய தாய்?

4 பள்ளியிற் சென்றுப யிலவி[illegible] லை—காலைப்
பண்பினை யாரும்வி ளக்[illegible]வில் லை
தெள்ளுங்க லைத்திறன் யாவைெ[illegible] று—நீதான்
சொல்லிக்கொ டுத்திட வேண்[illegible]மம் மா!



5 புத்தழ கெங்கினும் காணுதம் மா!—தோட்டப்
பூக்கள்ந றுமணம் கொட்டுதம் மா!
அத்திலே தென்றல்வந் தாடுதம் மா!—இவை
யாவுமே காலையைக் காட்டுதம் மா!

6 நீரிற்கு ளித்தெழு கன்னியைப் போல்- யாவும்
நிர்மல மாகவே காணுதம் மா!
பாரிற்பி றந்தவர் ஆனந்திக் க—காலைப்
பக்குவம் யாராலே வந்ததம் மா?

---

## 38 பனைவந்ததேன்?

மகள்:

நல்லசெ யல்பல செய்வது வும்—இந்த
நாட்டிற்குச் சீவனைப் போன்றது வும்
எல்லையில் லாப்புகழ் பெற்றது வும்—தண்ணீர்
என்பதை யாரேம றுப்பாரம் மா!

2 எங்குப்ப சுமையைக் கொட்டிவி டும்—செல்வம்
என்பவை ஆங்கெல்லாம் முண்டியெ ழும்
தங்குமி டமெல்லாம் எவ்வுயிர்க் கும்—ஒரு
தாயென நிற்பவை நீரல்ல வோ!

3 ஏழைப ணக்காரர் [illegible]ருக்கு மே—பொது
என்பதை நீ[illegible]லே கண்டிட லாம்
தாளுந்த லை[illegible]ா ருவிலை யாய்—எண்ணும்
தன்மை[illegible] டைத்தவை நீரல்ல வோ!

4 மண்ணிற்பு குந்துக ளியாக் கி—சுவர்
வைக்கவும் ஒற்றுமை நாட்டிட வும்
திண்மைபி றக்கும்வ ழியினை யும்—நாட்டிற்
சொல்லிக்கொ டுப்பவை நீரல்ல வோ!

5 நீரின்றி மானிடர் வாழ்வதில் லை—அதன்
நேசமில் லாவிட்டாற் ஜீவனில் லை
பாரிலுள் ளோர்களின் வாழ்க்கையி லே—இதன்
பாகத்தை யாரேவி ரிக்கவல் லார்!

6 தீயின்றி மானிடர் வாழற்கில் லை—அதன்
சேவையை லேசாகச் சொல்லற்கில் லை
தாயின்றி பிள்ளைகள் வாழ்வதுண் டோ?—இதன்
தன்மைபோற் தீயையுஞ் சொல்லிட லாம்

7 நீரும்நெ ருப்புமே என்றுசொல் வார்—அதை
நீக்கிவைத் தல்பெரும் தண்டமென் பார்
பேரும்பு கழும்ப டைத்திருக் கும்—இவை
பெற்றப கையென்ன சொல்லுசும் மா?

8 ஜென்மப்ப கைவந்த தெப்போ தோ?—இதைத்
தேசத்து மானிடர் நீக்கா ரோ?
என்னஇ ருந்தாலும் ஒன்றையொன் று—கொல்லும்
ஈனத்தொ ழில்தீமை அன்றோஅம் மா?

தாய்:

9 நல்லதோ கெட்டதோ நானறி யேன்—இவை
நட்போடி ருந்திடல் கூடா து
சொல்லமு டியாத கஷ்டமெல் லாம்—நம்மிற்
தோன்றிவி டும்இவை வொ[illegible]றுபட் டால்



10 தீய்க்குந்தண் ணீருக்கும் ஏதுப கை—மாந்தர்
செய்கையை யோர்புறம் நீக்கிவைத் தால்?
தாக்குஞ்செ யலுக்கு வேண்டிய வை—எலலாம்
செய்துகொ டுப்பவர் மானிட ரே!

11 நீரைய ரணுக்குட் தேக்கிடு வார்!—வெளி
நின்றுகொண் டேஅதைத் தாக்கச்செய் வார்!
வீரஞ்சு ரந்திடக் காற்றினை யும்—கூட
வேலைசெய் யுப்படித் தூண்டிடு வார்!

12 தீயினைத் தாக்கலும் இப்படி யே—கொஞ்சம்
சிந்தித்துப் பார்த்திடிற் கண்டுக்கொள் வாய்
ஆயிரம் ஞாயங்கள் பேசிடினும்—பகை
ஆக்காமற் கூடாதே வாழுதற்கு

---

## 39 ஆண்மையும் பெண்மையும்

தாய்:

சோலைமலர் பெண்களடி
தும்பியினம் ஆண்களடி
ஞாலவ ழக்கப்படி—மலரை
நாடுவது விந்தையோடி?

மகள்:

2 மதுவைக்கு டித்த[illegible]தும்பி
வாடவிட்டுப் ப[illegible]கஞ்செல்லும்
அதமச்செ[illegible]லயெண்ணின்—எனது
அங்கம்ப தறுதம்மா!

கொழும்பு தமிழ்ச் சங்கம்

3 ஆண்மைக்குப் பெண்மைபலி
ஆவதிலே தப்பும்வழி
காண்பதற் குண்டோ அம்மா?—எனது
கன்னித்தன்மை வாடலின்றி

தாய்:

4 மதுவும்ம ணமும்நல்க
மலர்ந்தக டன்மறந்து
எதுவும்பு ரிதற்கில்லை—இயற்கை
இட்டசட்டம் அல்லவோடி!

மகள்:

5 அடக்கும்வ லியிழந்த
ஆண்களோடு வாழ்வதிலும்
இடுக்கண்வே றில்லையென்றே—மனதில்
எண்ணமுண் டாகுதம்மா!

தாய்:

6 ஒப்படைக்க யெண்ணமின்றி
ஓடுதுபார் கோழியொன்று
எப்படியுஞ் சேர்வோமென்றே—விரட்டும்
இயல்பினைச் சேவலிற்பார்!

7 ஓடும்ப சுவைக்காளை
உபத்திரஞ் செய்வதைப்பார்
ஆடவர் உள்ளத்தையே—இவைக
அம்பலஞ் செய்யுதடி!



8 பெண்மைய டக்கங்காட்டி
புணர்ச்சிக்கி டங்கொடுக்கா
உண்மையைக் கண்டாயோடி—நமது
உள்ளத்தைக் காட்டுத டி!

9 இதயம மைந்தபடி
யாவுமி யங்குதடி
எதைக்குறை சொல்வதடி?—விலகி
எப்படி வாழ்வத டி

10 உணர்ச்சிஇ ழந்த சேர்க்கை
உதவாது என்பதென் றே
புணர்ச்சிம றுக்கத் தூண்டும்—அதுவே
பெண்மையை ஆட்டுத டி!

11 இயற்கைகி ளர்த்தும் ஆசை
எப்பொழுது பெற்றோரிடம்
செயற்கைக்கி டங்கொடுத்தே—வாழ்க்கை
செய்திட வேண்டும டி!

12 ஆண்மையை ஆளுஞ்சக்தி
அடங்கிய பெண்மையடி
வீண்பயம் வேண்டா மடி—உனக்கே
வெற்றிகி டைக்கும டி!

# 40 பறக்கும் இதயம்

மகள்:

கூவுங்கு யிற்போ லே—வாழ்க்கை செய்பக்
கூடாதோ நாட்டினி லே
தாவுஞ்சி றுமான் போல்—விளையாட
தடைகள் ஏற்றுக்கம் மா?

2 பேடையுஞ் சேவலு மாய்—ஒருவிதப்
பேதமு மில்லா மல்
ஜோடியாய் நிற்பதி லே—இருதயந்
துள்ளிப் போய் வொட்டுதம் மா!

3 மாடப்பு றுவினங் கள்—தமக்குள்ளே
வேற்றுமை காட்டலின் றி
கூடிப்ப றப்பதி லே—இருதயங்
கூடப்ப றக்குதம் மா!

4 காகாவெ னக்கரைந்து—தங்களினக்
காகங்க ளையழைத் து
பாகப்ப டுத்துவ தில்—இருதயம்
பங்குக்கு ஏங்குதம் மா!

5 தூக்கணத் தான்குரு வி—கூடுகட்டி
ஜோடியாய் வாழ்வதி லே
ஏக்கம்பி டிக்குதம் மா!—இருத...
என்னிட மில்லையம் மா!



6 ஜோடிபி ரியா மல்—பிறரிடம்
தொண்டுகள் செய்யா மல்
தேடிக்கு விக்கவென் றே—பாபச்செயல்
செய்யாமல் வாழுதம் மா!

7 எங்கும்ப றந்திட லாம்—கிடைத்ததை
யாவருந் தின்றிட லாம்
தங்குமி டங்க ளெல்லாம்—சொந்தமெனச்
சிந்தைக ளித்திட லாம்

8 பக்ஷியாய் மாறிவி ட—எனக்கொரு
பாக்கியம் வாய்த்த தென் றால்
நிச்சயம் மாறிடு வேன்—நினைப்பவை
நடப்ப துண்டோஅம் மா?

---

# 41 நாமும் அந்த இனங்கள்தான்

தாய்:

புள்ளினம் யாவும்நம் ஜாதிய டி—ஒன்று
பட்டவ ரென்பதில் ஐயமில்லை
எள்ளிந கையாடுந் தன்மையி லே—சில
ஏற்றம்ப டைத்தவ ராகிவிட் டோம்

2 கூட்டுமு றையிலே வாழ்க்கைசெய் ய—ஒரு
காவலும் ஆட்சியுந் தோற்றுவித் தோம்
ஆட்டுங்கு ளிரிலே தப்பவென் றெ—நல்ல
ஆடைய ணிந்துப ழகிக்கொண் டோம்

3 கட்டுப்பா டென்றேதோ சொல்லிக் கொண்டோம்—பல
கஷ்டங்கள் ஏற்கவும் வொப்புக்கொண் டோம்
கெட்டவை நல்லவை ஆய்ந்துகட் டி—ஒரு
கீர்த்திப டைத்தவ ராகிவிட் டோம்

4 ஜாதிகள் ஆயிரந் தோற்றுவித் தோம்—பல
சண்டைக்கு வித்துகள் போட்டுவைத் தோம்
நீதிகள் ஆயிரஞ் செய்துவைத் தோம்—ஈனர்
நெஞ்சைப்பி ளக்கும்வாள் தீட்டிவைத் தோம

5 பேச்சொடு நிற்கும்ம தஞ்சமைத் தோம்—மனப்
பேதம்வ ளர்க்கும்வோர் போதைவைத் தோம்
ஆச்சரியப்படும் நுண்கலை கள்—பல
ஆக்கிவைத் தோம்பொருள் தேக்கிவைத் தோம்

6 பெண்களை மாற்றிம ணம்முடித் தோம்—பல
பந்தமுண் டாகும்மு றைமைசெய் தோம்
எண்ணத்திற் பட்டவை யாவுஞ்செய் தே—மற்ற
யாதிலும் மேலவ ரென்றுக்கொண் டோம்

7 இயற்கைச் சக்தியை வேலைகொள் ள—பல
யந்திர சாதனம் ஆய்ந்துகண் டோம்
செயற்கை யென்பதைத் தோற்றுவித் து—அதிற்
சீரியர் என்றுபேர் பெற்றுவிட் டோம்

8 மாறும்வு லகத்தைக் கண்[illegible]வர் நாம்—அதன்
மாட்சியி லானந்தங் கொண்[illegible]வர் நாம்
வேறுபி ராணிகட் கெட்டாத—[illegible]
வேற்றுமை மட்டுமே நம்மிலுண்[illegible]



9 உள்ளச்செ யலிலே மாற்றமில் லை—அதில்
ஒவ்வொன்றும் சம்பந்தப் பட்டுநிற் கும்
தள்ளமு டியாத செய்கையெல் லாம்—பழம்
தன்மையி லேயின்னும் நிற்குத டி!

10 மோகத்தில்த் தாபத்தில் மாற்றமில் லை—கோபம்
மூண்டியெ ழுவதில் மாற்றமில் லை
ஊகத்தில் சோகத்தில் மாற்றமில் லை ஏதும்
உண்ணலு றங்கலில் மாற்றமில் லை

11 பாசத்தில் நேசத்தில் மாற்றமில் லை—இசை
பாடலில் ஆடலில் மாற்றமில் லை
கோஷத்தில் ரோசத்தில் மாற்றமில் லை—கூடிக்
கும்மாளங் கொட்டலில் மாற்றமில் லை

12 அச்சத்திற் கூச்சத்தில் மாற்றமில் லை—வாழும்
ஆசையில் மாற்றங்க ளேதுமில் லை
இச்சித்த தொன்மைய டைவதி லே- மாற்றம்
ஏதுந்த னியாகக் கொள்ளவில் லை

13 வாழுமு யிர்களி லசகணங் கள்—என்று
வையம்வ ழங்கிய தீர்ப்பினி லே
கீழுமே லாகயி ருக்கவில் லை—ஒரு
கூட்டுஇ னங்களாய் நிற்குத டி!

14 மாற்றம டைந்தம[illegible]னிதருக் குப்—பழம்
மாட்சியில் வா[illegible]ங்இ ன[illegible]களுக் கும்
ஏற்றமும் [illegible]வுமி ருக்கவில் லை—உயிர்
யாவுமொ[illegible]விலை யாகும டி!

## 42 ஏற்றுக்கு வேற்றுமை?

மகள்:

ஜாதிச மயங்கள் ஏற்றுக்கம் மா?—இந்தக்
ஜாதியால் நாட்டிற்கு நன்மையுண் டோ?
நீதியைத் தாக்குமோர் ஜாதிக்கட் டு—இன்னும்
நிற்கவும் வேண்டுமோ சொல்லுஅம் மா?

2 பஞ்சமர் என்றவோர் ஜாதிய ராம்—வீட்டுப்
பக்கம்நெ ருங்கக்கூ டாதவ ராம்?
நெஞ்சிற்ச மபுத்தி யுள்ளவர் கள்—இந்த
நிந்தையைச் சொல்லவும் வாய்வரு மோ!

3 எங்கள்ம தத்தவன் என்றுசொல் வார்—அண்டின்
ஈனகு லத்தவன் என்றிடு வார்!
எங்கேனும் இப்படி விந்தையர் கள்—இன்னும்
இருக்கக் கூடுமோ சொல்லுஅம் மா!

4 தோட்டித்தொ ழிலேயி கழுகின் றார்—நகர்
சுத்தஞ்செய் யாவிடி லென்னவா கும்!
நாட்டிலி ழிந்தவை யென்றுகண் டும்—மாறும்
நெஞ்சமில் லாததும் விந்தைய வே!

5 நாட்டுப்பு றத்தைநி னைக்கையி லே—ஒரு
நாணம்பி றக்குது நெஞ்சினி லே!
காட்டுவி லங்கினுங் கேவல மா[illegible]—வாழும்
கஷ்டத்தை யெப்படிச் சொல்வதம் மா?



6 மேடையி லேறிமு ழங்கிடு வார்—வீடு
வந்ததும் யாவும்ம றந்திடு வார்!
கோடிக்க ணக்கான மக்களுக் கு—வழி
காட்டாத ஞாயமும் ஞாயம வோ?

7 ஜாதியிற் கண்டதொ ழிலினங் கள்—ஒரு
சாராரைத் தாழ்ந்தவ ராக்குதம் மா!
நீதிய றியாத நாட்டினி லே—இவை
நிற்கவும் வேண்டு மோ சொல்லுஅம் மா?

8 அன்பைப்பி ளந்திடுஞ் செய்கையெல் லாம்—சாகும்
அந்திய காலமும் கிட்டா தோ?
இன்பம்பொ துவெனுங் கொள்கையி லே—நாடு
இயங்கக் கூடாதோ சொல்லுஅம் மா?

---

## 43 நாமே வகுத்துக் கொண்டோம்

தாய்:

நாசத்தொ ழில்ரொம்பச் சின்னத டி!—அதை
நீகருந்தொ ழில்ரொம்ப வல்லத டி!
தேசத்தின் ஆறுத புண்ணு ன—இதைச்
சொஸ்தப்ப டுத்தநா ளாகும டி!

2 மற்றயி னங்களில் வேறுப டா—தாங்கள்
மானிட ஜாதியி ரென்றுகொண் டார்
சுற்றமொ[illegible]கிலே கட்டுப்ப ட—ஞாயத்
தோரணை களபல செய்துவைத் தார்!

3 கொல்லுந்தொ ழிலினைப் பாபமென் றூர்—மது
கூடாத பாவினை யென்றுசொன் னூர்
நில்லாத பேர்களைத் தள்ளிவைத் தார்—ஒரு
நீசக்கு லம்உரு வானத டி!

4 செய்யுந்தொ ழிலைப்ப கிர்ந்துகொண் டார்—அதன்
செல்வத்திற் கேற்பம திப்பளித் தார்
கையின்கீ ழுள்ளதம் பிள்ளைகட் கு—தொழில்
கற்றுக்கொ டுத்தனர் தந்தையர் கள்

5 தீமையிற் தோன்றிய கூட்டங்க ளும்—தொழில்
செய்வதிற் தோன்றிய கூட்டங்க ளும்
பூமியிற் பற்பல ஜாதிக ளாய்—உருப்
பெற்றுப்பி ரிந்தவை யாகும டி!

6 தோன்றுமி னங்களை வேறுசெய் து—நான்கு
ஜாதிப்பெ யராலே சட்டஞ்செய் தார்
ஆன்றோர்கள் கட்டளை யென்றுசொல் வி—அதை
ஏற்றுந டந்தனர் நிம்மதி யாய்

7 உண்மைய றியாத பின்னவர் கள்—இவை
ஒவ்வொன்றுஞ் ஜாதியாய் எண்ணிக்கொண் டார்
கண்கள்தி றவாத பஞ்சைய ரும் —ஜாதிக்
கட்டிற்குள் வாழப்ப ழகிக்கொண் டார்!

8 காலக்க திரவன் பொற்கதி[illegible]ல்—துயிற்
கண்கள்வி ழித்திட்ட பஞ்சம[illegible]கள்
ஞாலத்தை நன்றாகக் கண்டுகொ[illegible]டார்—சென்ற
நாட்களைப் போன்றினுந் தூங்கமா[illegible] டார்



# 44 விடுதலை வேண்டும்

மகள்:

நாட்டைவ ளப்படுத் தும்—உயரிய
நாரிம ணிகளெல் லாம்
வீட்டில டைக்கப்பட் டார்—விடுதலை
வேண்டாமோ சொல்லுஅம் மா?

2 போகிக்க வேண்டுமென் றே—ஒருத்தியைப்
பாரியாய்க் கொண்டிடு வான்!
மோகிக்கச் செய்வது தான்—அவன் செய்யும்
முக்கியத் தொண்டோஅம் மா?

3 பிள்ளைகள் பெற்றெடுக் க—ஒருத்தியைப்
பெண்ணாகக் கொண்டிடு வான்!
துள்ளுமு ணர்ச்சியெல் லாம்—அழிந்திடச்
சோம்பிக்கி டப்பது வோ?

4 வீட்டைய லங்கரிக் க—ஒருத்தியை
வாழ்க்கைப்ப டுத்திக்கொள் வான்!
நாட்டைம றந்துவிட் டு—அறைக்குள்ளே
நாளைக்க டத்தனு மோ?

5 ஒத்தையொ ருத்த[illegible]க் காய்—நமக்குள்ள
உயர்ந்த சக்தி[illegible]ல் லாம்
தத்தம்பு ரி[illegible]ட் டால்—உலகியல்
தளைப்ப [illegible]படி யோ?

6 பட்டங்கள் பெற்றிடு வோம்—அவரொடு
பந்தயங் கட்டிடு வோம்
எட்டுங்க லைகளெல் லாம்—படிப்பதில்
இன்பத்தைக் கண்டிடு வோம்

7 எண்ணுந்தொ ழில்புரி வோம்—அவரொடு
யாதிலும் போட்டிசெய் வோம்
பெண்களும் தக்கவர் தாம்—எனுமொரு
பேற்றைநி லைத்திடு வோம்

8 வையவ ளர்ச்சியி லே—பெரும்பணி
வழங்க வேண்டுமன் றோ?
செய்யுங்க டன்மறந் தால் பிறந்ததிற்
சிறப்பு உண்டோஅம் மா?

---

## 45 நீ எஜமாட்டி

தாய்:

நாட்டைவ ளப்படுத் தும்—உயரியர்
நங்கைய ராகும டி
வீட்டிலி ருந்துகொண் டே—நடப்பிக்க
வேண்டிய பெண்களடி

2 அன்பிலே கட்டிவிட் டால்—புருஷர்கள்
ஆடுவார் சொல்வன போல்
இன்பத்திற் சொக்கவைத் தால்—[illegible]கியல்
எத்தையு மெண்ணா ரே!



3 வீரனைத் தோற்றுவித் தால்—பெரியவோர்
வீரப்பெண் ணாய்விட லாம்
தீரனை ஈன்றெடுத் தால்—அவளினும்
சீமாட்டி யுண்டுமோ டி?

4 அள்ளுங்க லைப்பெருக் கை—உலகிற்கு
அள்ளிக்கொ டுப்போ னை
பிள்ளையா யீன்றுவிட் டால்—இதனினும்
பெருமை யுண்டுமோ டி?

5 பக்குவஞ் செய்வதி லே—நமக்குள்ள
பங்குகள் சின்னவை யோ!
மிக்கவு யர்ந்ததொ ழில்—இதனினும்
வேண்டுமோ செய்வதற்கு?

6 கொஞ்சுங்கு ழந்தையொ டு—இருதயம்
கும்மாளங் கொட்டலி லும்
மிஞ்சிய இன்பவெ றி—எதனிலும்
முளைக்கக் கூடுமோ டி?

7 தாய்மை வாஞ்சையி லே—திளைத்தவன்
தன்மையைச் சொல்வதென் றால்
வாய்மை பெற்றோ ரும்—மலைத்திடும்
வளஞ்செ றிந்தத டி!

8 யாருக்கு யாரடி [illegible]?—இருவரில்
யாருக்கு யார்[illegible]மை?
ஊருக்குட் [illegible]க்கொள் ளும்—வழமையை
விட்டுத்தெ[illegible]ந்துக்கோ டி

## 46 வாழ்க்கை செய்

தாய்:

காதலொ ருவனைக்கை பிடித்தால்—அவன்
கருத்திற்சு ழன்றுவர வேண்டும்
நாதம்பு ரியுமுந்தன் வாழ்க்கை—இதை
நினைவிலி ருத்திக்கோடி கமலா!

2 தாயிற்சி றந்ததயை வேண்டும்—அவன்
சிந்தைதெ ரிந்துதவ வேண்டும்
பாயிற்பொ துமகளைப் போலே—காமப்
பெருக்கைக்கி ளர்த்திடவும் வேண்டும்

3 வீட்டிற்ப ணிமகளைப் போலும்—அவன்
விரும்புந்தி ருமகளைப் போலும்
நாட்டில ரசியலை ஊட்டும்—ஒரு
நல்லமைச்ச ருயமைதல் வேண்டும்

4 அன்பில டிமைசெய்ய வேண்டும்—நீயும்
அன்பில டிமைப்பட வேண்டும்
இன்பந்த தும்பிவழிந் தோடும்—இது
ஈடற்ற வாழ்க்கையடி கமலா!

5 விருந்தையு பசரிக்க வேண்டும்—சிந்தை
விரிந்ததாய்க் காட்டிக்கொள்ள வேண்டும்
வருந்தும்ப டிப்பிறரைப் பேசும்.ல் ...ல்லா
வம்பியைக் கண்டொதுங்க வேண்டும்



6 தள்ளாவ யதடைந்த மாமி—கொஞ்சம்
சலசலப் புள்ளவன்தான் எனினும்
உள்ளம்வ ருந்தயெதிர்க் காதே -வேண்டும்
உதவிபு ரியமற வாதே

7 கணவனை ஈன்றஉந்தன் மாமன்—அவன்
கூடப்பி றந்தஅக்காள் தங்கை
குணங்கள றிந்துநடந் திடுவாய்—உன்னைக்
குடும்பத்த ரசியென்றே புகழ்வார்

8 வறுமையிற் செம்மைசெய்ய வேண்டும்—அந்த
வழக்கத்திற் காலந்தள்ள வேண்டும்
சிறுமைத ருவனவை யெல்லாம்—தன்னைச்
சேராமற் பார்த்துக்கொள்ள வேண்டும்

---

## 47 ஆணும் பெண்ணும்

தாய்:

பெண்மையைக் கார்க்கவேண் டும்—அதிலுள்ள
பெருமை காணவேண் டும்
உண்மையை நாட்டவேண் டும்—நீயுமொரு
உத்தமி யாகவேண் டும்

2 ஆருயுர் பெண்க... டி—உடம்பென
ஆனவர் ஆண்... டி
பேரும்பெ...புக ழும்—உயிரின்றேல்
பிணத்திற் ...குண்டுமோ டி?

45715

3 நாவடி ஆண்களி னம்—ஒலித்தன்மை
நங்கைக ளாகும டி
ஆவல்வெ ளிப்படுத் தும்—ஒலியின்றேல
ஆனந்த முண்டுமோ டி?

4 பூவடி ஆண்களி னம்—நறுமணம்
பெண்களே ஆகும டி
ஆவல்கி ளர்த்துகின் ற—மணமின்றேல்
யாருக்குத் தேவைய டி?

5 பாலடி ஆண்களி னம்—அதன்சுவை
பெண்களே யாகும டி
வேலொத்த கண்ணுடை யாய்—தெரிந்துநீ
வாழுதல் வேண்டும டி

6 விட்டுப்பி ரியா மல்—எதனிலும்
வேற்றுமை காட்டா மல்
கட்டுங்க விதையி லே—பாவமெனக்
காணுதல் பெண்மை யடி

7 ஆடவர் வாழ்க்கையெல் லாம்—மனைவியர்
ஆட்சியி லுள்ளத டி!
கேடுவந் தெய்தா த—முறைமையைக்
காண்பதுன் வேலைய டி

8 வாழ்க்கைப்ப டகினி லே[illegible]துடுப்புந்தன்
வயத்தி லுள்ளத டி
வீழ்க்கையும் வெற்றியை யும்—[illegible]க்கிடும்
மேதையு மாகும டி!

கொழும்புத் தமிழ்ச் சங்கம்